பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 05 திங்கட்கிழமை 21.11.2022 கதிர் 16

**இது ரகசியம் அல்ல!**

நேற்று ஒரு செய்தி கேள்விக் குறியுடன் நமது 'காலைக்கதிர்' காலை நாளிதழின் முன்பக்கத் தில் பிரதான தலைப்பில் பிரசுர மாகியிருந்தது.

'இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் இலங்கையில்?'

2

# பயங்கரவாத தடைச் சட்டம்; கைவிடுவதற்கு அரசு முடிவு!

## மாற்றாகப் புதிதாக வருகிறது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்

கொழும்பு,நவம்பர் 21

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முழுமையாகக் கைவிட இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதற்குப் பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற பெயரில் புதிய சட்டம் ஒன்றை நடைமுறைக்கு கொண்டு வருவதற்கு அரசு தீர்மானித்திருப்பதாக கூறப்படுகின்றது.

இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்க்கமான முடிவு ஒன்றை எடுத்து இருக்கிறார் என் றும், அதை நடைமுறைப்படுத்தும் வகையில் புதிய சட்டத்தை உருவாக்கும் மும்முரமான நடவடிக் கைகளில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஈடு பட்டிருக்கின்றார் என்றும் அரசுத் தரப்பு வட்டாரங் கள் தெரிவித்தன.

2

## வடமராட்சியில் நீரில் மூழ்கி கிளிநொச்சி யுவதி மரணம்

யாழ்ப்பாணம், வடமராட்சி - கற்கோவளம் பகுதியில் நேற்று பிற்பகல் கடலில் நீராடி விட்டு மீண்டும் அருகில் இருந்த நீர்த்தேக்கத்தில் நீராடச் சென்ற18 வயது யுவதி ஒரு வர் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த இந்த யுவதி கற்கோவளம் பகுதி யில் உள்ள தனது சகோதரியின் வீட்டுக்கு வந்திருந்த நிலை யில் நான்கு நண்பர்களுடன் கடற்கரைக்கு அருகிலுள்ள நீர்த்தேக்கத்தில் நீராடிக் கொண்டிருந்த வேளை நீரில் மூழ்கியுள்ளார்.

இணைந்து நீராடிய நண்பர்களால் கூக்குரலிட்ட நிலை யில் அருகிலுள்ள இராணுவத்தினர் அந்த

2

## இரு மாணவ தலைவர்களுக்கும் எதிரான தடுப்பு உத்தரவில் ஒப்பமிட ரணில் மறுப்பு

காலிமுகத்திடலிலும் அலரிமா ளிகைக்கு வெளியேயும் இடம் பெற்ற ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு கடந்த வெள் ளிக்கிழமை வரை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக் கப்பட்டிருந்த இரு மாணவ தலை வர்களான அனைத்து பல்கலை கழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டா ளர் வசந்த முதலிகே மற்றும் அனைத்து பல்கலைகழக பிக்கு மார் மாணவர் ஒன்றியத் ஏற்பாட் டாளர் கல்வேவ ஸ்ரீதம்மதேரர் ஆகியோரை

2



## சாலை கடல் நீர் ஏரியில் இளஞனைக் காணோம்

(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு சாலை கடல் நீர் ஏரியில் நேற்று இறால் எடுக்க சென்ற இளைஞன் கடல் இழுத்துச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ளார்.

ஐந்தாம்வட்டாரம்இரணைப்பாலைபுதுக்குடியிருப்பைச் சேர்ந்த 26 வயதுடைய செ.நிசாந்தன் என்ற இளைஞனே கடலில் இழுத்து செல்லப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக

2

## மலையகத்துக்கு வந்து ரணில் என்ன சொல்லப் போகின்றார்?

### எதிர்பார்த்துக் காத்திருக்கின்றாராம் மனோ



வடக்கே போன ஜனாதிபதி மலையகத்துக்கும் வருவதாக சொன்னார். வந்து என்ன சொல்லப் போகிறார் என்பதை எதிர்பார்கிறேன் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் கூறியிருக்கின்றார்.

இது தொடர்பில் மனோ கணேசன் எம்பி மேலும் கூறி யவை வருமாறு:-

இப்போது வடக்கிற்கு போவதை போல், மலையகத் துக்கும், அரசியல்

9

## கொட்டடியில் ஹெரோயினுடன் மூவர் சிக்கினர்

யாழ் கொட்டடிப் பகுதியைச் சேர்ந்த வர் மூவர் 500 மில்லி கிராம் ஹெரோ யின் போதைப் பொருளுடன்

2

## 12 கோடி ரூபா மோசடியாம்; இரு யுவதிகள் யாழில் கைது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.21

யாழ்ப்பாணம், நாவாந்துறையைச் சேர்ந்த சகோதரி களான இரு யுவதிகளை 12 கோடி ரூபா வரை

2

## நிபந்தனை ஏதுமின்றி மொட்டு பட்ஜெட்டை ஆதரிக்க முடிவு!



வரவு - செலவுத் திட்டத் திற்கு நிபந்தனையின்றி ஆதர வளிக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளதாக ஆளும் கட்சியின்

2

## மாவீரர்களின் பட்டியலில் இடைச்செருகல் வேண்டாம் என்கின்றார் காக்கா அண்ணன்

### தமிழ்க் காங்கிரஸ் மீது அவர் காய்ச்சல்



யாழ்ப்பாணம்,நவ.21

தமிழீழ மாவீரர் பணிமனையினால் வெளியிடப்பட்ட மாவீரர் பட்டியலில் உள்ளோரையும், 2009 மே 15 இற்கு பின்னர் வெளியுலகத்துக்குத் தகவல் தெரிவிக்க முடியாத களச்சூழலில் வீரச்சாவடைந்த புலிகள்

2

## சீனாவின் மெத்தனப் போக்கினால் தாமதமாகும் நாணய நிதிய உதவி

இலங்கையுடனான கடன் மறுசீர மைப்பில் முக்கிய இருதரப்புக் கடனா ளியான சீனா அக்கறை காட்டாததன் காரணமாக டிசெம்பரில் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கட னைப் பெறுவதற்கு இலங்கையால் உடன்பாடு எட்ட முடியாது என நிதி ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அவ்வாறு நடந்தால் இலங்கைக் குக் கடனைப் பெற அடுத்த வருடம் மார்ச் மாதம் வரை காத்திருக்க வேண்டியிருக்கும் என

2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதுதான் அந்தச் செய்தி.

அது வெளியாகி சுமார் 24 மணி நேரம் கழித்தும் அது உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்படவும் இல்லை; இதுவரை மறுக்கப்படவும் இல்லை.

இந்தியத் தூதரக வட்டாரங்கள் வரை சம்பந்தப்பட்ட தரப்புகள் எல்லாம் கையைப் பிசைகின்றனவே தவிர, உருப்படியான பதில் தருவனவாக இல்லை. எல்லாத் தரப்புக்களுமே அசாதாரணமான மௌனம் பேணுகின்றன. நமக்கு ஏன் வீண் வம்பு என்ற போக்கில் தள்ளி நிற்க முயல்கின்றன என்பது புரிகிறது.

பல தரப்புகளையும் தொலைபேசியில் பிடிக்க முடியவில்லை. சிக்கிய தரப்புகள் கூட என்னத்தே கண்ணையா மாதிரி 'வரும்; ஆனா வராது!' என்ற பாணியில் 'வந்தார்; ஆனா வரேல்ல!' என்ற சாரப்பட பதில் கூற பார்க்கின்றார்கள்.

பலரும் நமக்கேன் இந்தத் தேவை இல்லாத சோலி என்று பதில் தராமல் நழுவவே விரும்புகின்றார்கள்.

இந்தியப் பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சத்தம் சந்தடியின்றி கொழும்பு வந்தார் என்பதை இலங்கை அரசு வட்டாரங்கள் கூட மறுக்கவும்; இல்லை உறுதிப்படுத்தவும் இல்லை.

எல்லாவற்றிலிருந்தும் வெளிப்படும் உண்மை ஒன்றுதான்.

அது - நெருப்பில்லாமல் புகையாது என்பதே!

அஜித் டோவல் வகிக்கும் பதவி தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நிலையாகும். இந்தியாவில் ஓர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவி நிலைக்கு சமமானது. இந்தியப் பிரதமரின் சார்பில் சமாதானத்தையும் யுத்தத்தையும் பிரகடனப்படுத்தும் அதிகாரப் பதவி நிலை அது.

நாட்டின் அரசினதும் அரசியலினதும் நிலைமைகளுக்கு ஏற்ப, இந்தியாவின் பாதுகாப்பு அமைப்புகளை மட்டுமல்லாமல், உளவு அமைப்புகளையும் இயக்கும் பொறுப்பு அவருடையது. அத்தகைய பதவி நிலையில் இருப்பவரின் செயற்பாடுகள் எப்போதும் அரசியல் தலைவர்களின் வெளிப்படையான செயற்பாடுகள், நடவடிக்கைகள் போன்று அமையா.

பல சமயங்களில் உத்தியோகபூர்வமாகவும் சில சமயங்களில் உத்தியோகப்பற்றற்றவை போன்றும் செயல் படவேண்டிய கட்டாயம் அவருக்கு இருக்கும். அது குறித்து யாரும் கேள்விகள் எழுப்பவும் முடியாது.

அப்படி ஒரு விசிட்தான் இப்போது அவர் இலங்கைக்கு மேற்கொண்டதும் போலும். அதனால்தான் இவ்வளவு மூடு மந்திரம்.

தமது வருகையின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அவர் சந்தித்தாரா, இந்திய பிரதமடமிருந்து தாம் எடுத்து வந்ததாகக் கூறப்படும் செய்தியை அவர் ஜனாதிபதி விக்கிரமசிங்கவிடம் ஒப்படைத்தாரா - என்பவை கூட இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

மலிந்தால் சந்தைக்கு - சந்திக்கு - வரும். அப்போது பார்த்துக்கொள்வோம்.

நேற்றைய எமது தலைப்புச் செய்தி சம்பந்தப்பட்ட வட்டாரங்களால் உறுதிப்படுத்தப்படாமலும், மறுக்கப்படாமலும் மறக்கப்பட்டுப் போகலாம். அதுதான் அந்தத் தரப்புகளின் இராஜதந்திரக் கையாளுகையாகவும் இருக்கக் கூடும்.

**- மின்னல் -**

## பயங்கரவாத தடைச் சட்டம்;

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் அரசமைப்பு ரீதியாகத் தன்னை ஜனாதிபதியாக இணைத்துக் கொண்டு நான்கு மாதங்களின் பின்னர், ரணில் விக்கிரமசிங்க அரசியல் ரீதியிலும் மற்றைய வகையிலும் பல மாற்றங்களிற்குத் தலைமை தாங்குகின்றார் என்று கூறப்படுகின்றது.

இந்த வகையில் கடந்த 44 வருடங்களாக நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாகக் கைவிடும் தீர்மானத்தையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்திருக்கின்றார் என்று தெரிகின்றது.

இந்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு எதிராக சர்வதேச ரீதியில் பெரும் அழுத்தங்கள், எதிர்ப்புகளை இலங்கை அரசு தொடர்ந்து எதிர்கொண்டு வரும் சூழ்நிலையில் இந்த முடிவு இப்போது தீர்க்கமாக எடுக்கப்பட்டிருக்கின்றது.

இந்தச் சட்டத்தைக் கைவிடும் உறுதிப்பாட்டின் அடிப்படையிலேயே 2017 ஆம் ஆண்டில் ஜி.எஸ்.பி. வரிச் சலுகை ஐரோப்பிய ஒன்றியத்தினால் இலங்கைக்கு மீண்டும் வழங்கப்பட்டது. ஆனால் ஐந்து ஆண்டுகள் கடந்தும் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாத நிலையில், அந்த வரிச்சலுகையை திரும்பப் பெறும் உசிதத்தில் ஐரோப்பிய ஒன்றியம் செயற்பட்டு வருகின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தையும் விரைந்து சமாளிக்கும் விதத்தில், இருக்கும் சட்டத்தை கைவிட்டு, பலதரப்புக்கும் ஏற்புடைய புதிய சட்டமன்றைக் கொண்டு வருவது குறித்து அரசுத் தலைமை தீவிரமாக இருப்பதாக விடயம் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தனர்.

## இரு மாணவ .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைப்பதற்கான உத்தரவில் கையெழுத்திட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மறுத்து விட்டார்.

அவர்களின் இந்த வழக்குகள் இனி மேல்நாட்டின்வழமையானசட்டங்களின் அடிப்படையில் கையாளப்படும் என அரசாங்க வட்டாரமொன்று தெரிவித்தது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அவர்களைத் தடுத்துவைப்பதற்கான முன்னையை உத்தரவில் பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரட்ண கைச்சாத்திட்டிருந்தார். அவர் தற்போது இராணுவப் பாதுகாப்பு குழுவொன்றுடன் பாக்கிஸ்தானிற்கு விஜயம மேற்கொண்டிருந்தார். தற்போதுஅவர்கள்நாடுதிரும்பியுள்ளனர்.

## வடமராட்சியில் நீரில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுவதியை மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்த்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

அலன்மேரி ஆனந்தராஜா (வயது 18) எனும் யுவதியே உயிரிழந்துள்ளார்.

யுவதியின் மரணம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

## சாலை கடல் நீர் ஏரியில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது

இவரை தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும் கடல் சீற்றம் காரணமாக நேற்றிரவு வரை பலன் ஏதும் கிடைக்கவில்லை.

## கொட்டடியில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் யாழ் மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசிய தகவலை அடுத்து கொட்டடிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றைச் சோதனையிட்டபோது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களுக்கு ஏற்கனவே போதைப்பொருள் வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன எனவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அத்தோடு கைது செய்யப்பட்டவர்கள் தங்களுக்கு மாதகல் பகுதியிலிருந்து போதைப்பொருள் கிடைப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளமையோடு விசாரணைகளின் பின் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட உள்ளனர்.

## 12 கோடி ரூபா .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பண மோசடி செய்தனர் என்ற சந்தேகத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நோர்வேயில் வசிக்கும் இலங்கையர் ஒருவரை ஏமாற்றி இந்தத் தொகையை இவர்கள் சுருட்டினர் என்ற குற்றச்சாட்டில் இவர்களைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கொழும்பில் இருந்து இரகசியப் புலனாய்வுப் பிரிவு பொலிஸார் நாவாந்துறைக்கு வந்து இரு பெண்களையும் கைது செய்துள்ளனர் என்று கூறப்பட்டது. இதன்போது 30 மற்றும் 34 வயதுப் பெண்கள் இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து ஒரு தொகுதி நகை மற்றும் பணமும் மீட்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவர்கள் இருவரையும் வெள்ளியன்று கைது செய்து பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

நீதிமன்ற உத்தரவில் அவர்கள் டிசெம்பர் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

## நிபந்தனை ஏதுமின்றி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதான அமைப்பாளரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித் துள்ளார்.

நாடு எதிர்நோக்கி வரும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு தேவையான ஆதரவை வழங்குவதற்கு பொதுஜன பெரமுன செயற்பட்டு வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் பொதுஜன பெரமுன எவ்வித நிபந்தனைகளையும் முன்வைக்கவில்லை என கட்டுநாயக்க பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பூரண ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியுடன் இணக்கமாக செயற்படுவேன் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவித்துள்ளார்.

## சீனாவின் மெத்தனப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவின் வொஷிங்டனில் உள்ள ஆய்வாளர்கள் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

2.9 பில்லியன் அமெரிக்க டொலர்கள் விரிவான நிதி வசதியை 4 வருடங்களுக்காக பெற்றுக் கொள்வதற்காக இலங்கை, சர்வதேச நாணய நிதியத்திடம் கோரியிருந்ததுடன், அதற்கான பணியாளர் உடன்படிக்கையை கடந்த செப்டம்பர் மாதம் மேற்கொண்டிருந்தது.

அதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக இலங்கையின் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும், அதற்கான கலந்துரையாடல்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஜப்பானும் இந்தியாவும் அந்த கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருவதாகவும், சீனாவில் 20வது கம்யூனிஸ்ட் கட்சி மாநாடு நடைபெறுவதால், அது குறித்து விவாதிக்க இலங்கைக்கு போதிய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த காலத்திற்குள் இலங்கைக்கு கடன் வசதியை பெற்றுக்கொடுக்க முடியாவிட்டால், நாடு பாரிய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் என நிதி ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## மாவீரர்களின் பட்டியலில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இயக்கப் போராளிகளையும் தவிர வேறெவரையும் இடைச்செருகலாக இணைத்து மாவீரர்களின் புகழுக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டாம் என மாவீரர் அறிவிழியின் தந்தையான முத்துக்குமார் மனோகர் ஆகிய நான் சகல தரப்பினருக்கும் வேண்டுகோள் விடுக்கிறேன் என ஊடகங்களுக்கு அனுப்பிய செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரான காக்கா அண்ணன் (முத்துக்குமார் மனோகர்) அந்த அறிக்கையில் மேலும் கூறியிருப்பவை வருமாறு:-

அப்படி வேறு யாரையாவது நினைவுகூர வேண்டுமென வலியுறுத்தும் தரப்புகள் தங்கள் கட்சியின் நிறுவனர்களின் நினைவு நாளிலோ, பிறந்தநாளிலோ தனியாக நினைவு கூருவதற்கு உள்ள உரிமை பற்றி எவரும் ஆட்சேபனை தெரிவிக்க மாட்டார்கள் எனக் கருதுகிறேன்.

தங்கள் கட்சியின் எதிர்காலம் குறித்த கலந்துரையாடலின் முடிவில் ஏகமனதாகத் தாங்கள் எடுத்த முடிவு குறித்து சைக்கிள் சின்னத்துடன் தேர்தல் ஆணையத்தில் அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ் கட்சி என்று தம்மை அடையாளப்படுத்தும் தரப்பின் தலைவர் கஜேந்திரகுமார் தெரிவிக்கும் கருத்துக்களை காணொலி மூலம் அண்மைய நாள்களில் காணக்கூடியதாக இருந்தது. இதில் ஏனைய தரப்பினர் அனைவரையும் மாவீரர் நாளில் நினைவுகூர வேண்டுமென தாங்கள் முடிவெடுத்திருப்பதாக அவர் குறிப்பிடுகிறார்.

உலகில் ஒழுக்கத்திற்கு உதாரணமான அமைப்பாகக் குறிப்பிடப்படுவது விடுதலைப் புலிகளைத்தான். புகைத்தல் உட்பட போதைப்பொருள் பாவனை, மது போன்ற விடயங்களில் கண்டிப்பாக இருப்பதுபுலிகளின்வரலாறு. அவர்களின் ஒழுக்கம், தலைமைக்குக் கட்டுப்படல் போன்ற விடயங்கள் உலகறிந்தது. அவ்வாறு இருக்கையில் ஏனையவர்களை இந்தப் பட்டியலில் இணைக்க முயல்வது விடுதலைப் போராட்டத்தின் அரிச்சுவடியைக்கூட இவர்கள் கற்க முனையவில்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது.

புலிகளைத் தவிர ஈரோஸ் இயக்கத்தவர் 266 பேரும், தனிக்குழுவாக பத்துப் பேரும் தமிழீழ மாவீரர் பணிமனையின் மாவீரர் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். தனிக்குழுவில் பொன்.சிவகுமாரன் (05/06/1974) யாழ், பெஞ்சமின் (01/01/1981) மட்டக்களப்பு, தங்கத்துரை (நடராசா தங்கவேல் - தொண்டைமனாறு, யாழ்) (25/07/1983), குட்டிமணி (செல்வராசா யோகச்சந்திரன். வல்வெட்டித்துறை) (25/07/1983), கணேசானந்தன் ஜெகநாதன் (தொண்டமானாறு.யாழ் (25/07/ 1983), செனட்டர் (வைத்தியலிங்கம் நடேசதாசன், வல்வெட்டித்துறை (25/07/1983), தேவன் / வெள்ளைமாமா (செல்லத்துரை சிவசுப்பிரமணியம் - அச்சுவேலி யாழ்) (25/07/1983), சிவபாதம் மாஸ்டர் (நவரத்தினம் சிவபாதம் பத்தைமேனி அச்சுவேலி யாழ்) (25/07/1983) , சிறிகுமார் (முத்துக்குமார் சிவகுமார் உரும்பிராய் கிழக்கு யாழ்) (27/07/1983), ஜெகன்/ நிசான் (நடராசா ஜெகதீசன் , சங்கரத்தை, வட்டுக்கோட்டை, யாழ்.) (09/09/1984) ஆகியோரே இந்தப் பத்து மாவீரரும் ஆவார்.

செருப்புக்கு அளவாகக் காலை வெட்ட வேண்டும் என்ற பாணியில் கஜேந்திரகுமார் சொல்லும் விடயங்களின் உள்நோக்கத்தைப் பார்த்தால் பதின்மூன்றாவது சட்டதிருத்தத்திற்கு ஆதரவான நிலைப்பாடு கொண்டுள்ள இயக்கங்கள் - கட்சிகளுக்கு நேசக்கரம் நீட்டுவதை உணர முடிகிறது.

தலைவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கும் சூழல் அன்றைய கால அரசியல் நிலைமைகளினால் உருவானது. போராட்ட ஆதரவாளர் குடும்பங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள், கூட்டுப்பாலியல் வல்லுறவும் கொலையும் என எல்லாவற்றையும் தெரிந்து கொண்டுதான் தமிழ்த்தரப்பின் ஐக்கியத்திற்காக உச்சக்கட்ட விட்டுக் கொடுப்புடன் நடந்து கொண்டார். அதற்காக மாவீரர் பட்டியலில் அவர்களை இணைக்கத் தயாராக இருக்கவில்லை. எமது பட்டியலில் உள்ள பலரை மாவீரர் ஆக்கியதே இவர்கள்தான் என்று தெரிந்து கொண்டும் இம்முயற்சியில் இறங்கினார். எனினும், இரு இயக்கங்களிலும் தலா ஒவ்வொருவரை எக்காலத்திலும் இவர்களின் இயக்கங்களில் மீண்டும் இணைக்கக்கூடாது என வலியுறுத்தப்பட்டது.

2009இற்கு பின்னரான சூழலில் அவர்களை மீண்டும் தங்கள் கட்சியில் இணைத்துக்கொண்டன அந்த இயக்கங்கள். 2004 தேர்தலில் கூட்டமைப்பின் சார்பில் 22 பேர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகினர். இவர்கள் தலைவரைச் சந்தித்தனர்.

(13ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர்
Kalaikkathir

# தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண மாகாணசபைத் தேர்தலை நடத்தவேண்டும்!

## கோவிந்தன் கருணாகரம் வலியுறுத்து



தெற்கு அரசியலின் பலப் பரீட்சைக்காக உள்ளூராட்சி சபை தேர்தல் கோரப்படுகிறது. அதனை விடுத்து தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அடிப்படைப்புள்ளியான மாகாண சபை தேர்தலை முதலில் நடத்துவதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அடுத்த சுதந்திர தினத்துக்கு முன்னர் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் எனப் பலரும் தெரிவித்துள்ளமை வரவேற்கத்தக்கது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் சிறந்த சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டுள்ளது. அதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஒத்துழைப்பை வழங்கும்.

நாட்டில்புரையோடிப்போயுள்ள இனப் பிரச்சினை தீர்க்கப்பட்டது என்பதை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும். அதற்கான சந்தர்ப்பத்தையும் எதிர்க்கட்சியின் இணக்கப்பாட்டையும் பெற்றுக் கொள்ளக்கூடிய திறமை கொண்டவர் நீங்கள். அவ்வாறு செயற்பட்டால் அதற்கு எமது முழுமையான ஒத்துழைப்பையும் வழங்க முடியும்.

தமிழர்கள் சந்தர்ப்பத்துக் கேற்ப சிந்திப்பவர்கள் அல்லர். எப்போதும் சந்தர்ப்பத்துக்கு ஏற்ப சிந்திப்பவர்கள் சிங்கள அரசியல்வாதிகளே.

தமிழர்கள் சமஷ்டி தொடர்பில் எண்ணத்தை வெளியிட முன்பே அது தொடர்பில் தெரிவித்தவர் மறைந்த முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க.

13 ஆவது அரசியல் திருத்தத்தை நாம் கோரவில்லை. எனினும், 13 பிளஸ் வழங்க முடியும் என ஐக்கிய நாடுகள் சபையிடம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

வரவு – செலவுத் திட்டத்தை சபையில் சமர்ப்பித்து உரையாற்றிய ஜனாதிபதி, சமூக பாதுகாப்பு, திறந்த பொருளாதார முறை தொடர்பில் கருத்துக்களை முன்வைத்திருந்தார்.

சமூக பாதுகாப்பு என்பது என்ன?

இன்றும் கூட ஜனநாயகத்துக்கு எதிராக நாட்டில் பயங்கரவாதத் தடைச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஆறு மாதங்களுக்கு என கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் இப்போது 40 வருடங்களுக்கு மேலாகத் தொடர்கிறது.

இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ந்தும் தேவைதானா என்பதை உங்கள் சமூக பாதுகாப்பு என்பதன் அடிப்படையில் நான் கேட்க விரும்புகின்றேன்.

தேசிய பிரச்சினைக்குத் தீர்வுக்காக எந்த அரசாவது முயற்சிகளை மேற்கொண்டால், உடனடியாக அப்போதுள்ள எதிர்க்கட்சி அதற்கு எதிராகக் கோஷங்களை எழுப்பும். இதுதான் வரலாறு.

அடுத்த சுதந்திர தினத்துக்கு முன்னர் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என பலரும் தெரிவித்து, ஒரே நேர்கோட்டில் உள்ளமை வரவேற்கத்தக்கது.

இந்தச் சந்தர்ப்பம் சரியாக பயன்படுத்தப்பட்டால், எமது அடுத்த வரவு – செலவுத் திட்டம் இந்த நாட்டுக்கான சுபீட்சம் மிகுந்த வரவு – செலவுத் திட்டமாக அமையும்.

இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு இனப் பிரச்சினையே முக்கிய காரணம். ஆணிவேரை விடுத்து பக்க வேரில் செயற்பட முற்படாதீர்கள்.

எமது மக்கள் எத்தகைய தியாகங்களுக்கும் தயார். ஆனால், நாட்டின் பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்தும் அனைவருக்கும் சமமாகப் பகிரப்பட வேண்டும்.

இன, மத, மொழி ரீதியாக அன்றி சமமான வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும். இவை எப்போதோ நடந்திருந்தால் எமது நாடு உண்மையில் ஆசியாவின் ஆச்சரியமாகத் திகழ்ந்திருக்கும். உரிய காலத்தில் தேர்தல்கள் நடத்தப் பட வேண்டும். தேர்தல்களில் வெற்றி பெறுவோமா – தோல்வியடைவோமா என்று சந்தேகம் கொள்பவர்களால் ஜனநாயகம் நசுக்கப்படக்கூடாது.

நாட்டில் கலைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தல் இன்னும் நடத்தப்படவில்லை.

அது விடயத்தில் ஜனாதிபதி உரிய கவனம் செலுத்த வேண்டும்.

இனப்பிரச்சினைக்கான முதல் அடிப்படைப் புள்ளியாக கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறைமை கணக்கில் எடுக்கப்படாமல், தற்போது மாகாண சபை தேர்தல் தொடர்ந்தும் ஒத்திப்போடப்பட்டு வருகின்றது.

எதிர்க்கட்சிகள் அனைவரும் சேர்ந்து உள்ளூராட்சி தேர்தலை நடத்த வேண்டும் என்று நீதிமன்றம் வரை சென்றுள்ளார்கள்.

உள்ளூராட்சி சபை தேர்தல் தெற்கில் நடத்தப்படும் பலப் பரீட்சையாகவே அமையும்.

அடுத்து வரும் நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதி தேர்தலின் நிலையை கண்டுகொள்வதற்காகவே இப்போது உள்ளூராட்சி சபைத் தேர்தலைக் கோருகின்றனர்.

வடக்கு மாகாண சபை கலைக்கப்பட்டு நான்கு வருடமும், கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டு ஐந்து வருடமும் கடந்து போயுள்ளன. இந்நிலையில் மாகாண சபை தேர்தல் முதலில் நடத்தப்பட வேண்டும்.

தற்போதைய எமது ஜனாதிபதி ஒரு ஜனநாயகக் கனவானாக இருந்தால், அவர் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முன்பே மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும். – என்றார்.

# வெளியார் தலையீடு தேவையில்லை எனகூறுவது எந்த விதத்தில் நியாயம்?

## தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் சிறிதரன் கேள்வி



தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் விடயத்தில் மாத்திரம் வெளியார் தேவையில்லை எனக் கூறுவது எந்த விதத்தில் நியாயம் என நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கேள்வியெழுப்பியுள்ளார்.

யுத்தத்தை நடத்த, தமிழர்களை அழிக்க, பொருளாதாரத்தைகட்டியெழுப்ப மற்றும் நிதியுதவியை மட்டும் பெற்றுக் கொள்ள மட்டும் வெளியாரின் தலையீடு வேண்டும் எனச் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் நாட்டில் உள்ள இனப் பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படாமல் சர்வதேச நாணய நிதியம் நிதியுதவி வழங்குமானால் அது உலகம் தமிழர்களுக்கு செய்யும் துரோகம் என்றும் குறிப்பிட்டார்.


இதேவேளை தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேசுவதற்கு முன்பாக சிங்களத் தலைவர்கள், சமஷ்டி அடிப்படையிலான தீர்வுக்கு உடன் வர வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

# நாட்டில் வட்டி வீத அதிகரிப்பால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம்!

## மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் தெரிவிப்பு

வட்டி வீத அதிகரிப்பால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துமாறு வங்கிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பெறப்பட்ட கடன்களுக்கான வட்டி வீதங்கள் அதிகரிப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கே இந்தத் திட்டம் பொருந்தும். நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை தொடர்பான ஆலோசனைக் குழுவில், நாடாளுமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.




தற்போதுள்ள நிதிக் கொள்கைகளின் மூலம், அடுத்த வருட இறுதிக்குள் பணவீக்கம் 4 முதல் 5 சதவீதமாகக் குறைவடையும் என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க சுட்டிக்காட்டினார்.

# தமிழ்த் தேசிய இனத்தின் அடையாளம் கார்த்திகைப்பூ!

## பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு



கார்த்திகைப்பூவை இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளின் அடையாளமாகவே பார்க்கிறது. கார்த்திகைப்பூவை ஏன் முதன்மைப்படுத்துகிறீர்கள் என்று பயங்கரவாதக் குற்றப் புலனாய்வுத் துறையினர் என்னிடம் கேட்டு வாக்குமூலம் பெற்றிருக்கிறார்கள். கார்த்திகைப் பூவை விடுதலைப் புலிகள் தேசியமலராகத் தெரிவுசெய்திருந்தார்கள் என்பதால் அது விடுதலைப்புலிகளை அடையாளப்படுத்தும் பூ அல்ல. அது தமிழ்த்தேசிய இனத்தின் தாயகச் சூழலின் அடையாளம். அந்தவகையில், அது தமிழ்த்தேசிய இனத்தின் அடையாளம் ஆகும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டுத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் கார்த்திகை வாசம் மலர்க்கண்காட்சி நல்லூர் கிட்டு பூங்காவில் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது. கார்த்திகைப்பூச்சூடி ஆரம்பமான இதன் தொடக்க விழாவுக்குத் தலைமை வகித்து உரையாற்றும்போதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

சங்கக்கவி கபிலர் தொடங்கி தாயகக்கவி புதுவை இரத்தினதுரை வரை கார்த்திகைப் பூவைப் பற்றிப்பாடாத புலவர்களே இலர். அந்த அளவுக்குத் தமிழ் மக்களின் வாழ்வியலில் கார்த்திகைப் பூவுக்குத் தனியானதோர் இடமுண்டு. இதனாலேயே, இந்தியாவில் தமிழ்நாடு தனது மாநில மலராகக் கார்த்திகைப்பூவைத் தெரிவுசெய்துள்ளது. கார்த்திகைப் பூவின் பிரகாசமான மஞ்சள், சிவப்பு வர்ணங்களும் மாவீரர்களை நினைவேந்தும் கார்த்திகையில் மலரும் அதன் பண்பும் மேலதிக காரணங்களாக அமைய, விடுதலைப்புலிகளும் கார்த்திகைப் பூவைத் தேசியமலராக அறிவித்தார்கள்.

விடுதலைப்புலிகள் இப்போது இல்லை என்பதற்காகக் கார்த்திகைப்பூ தமிழ் மக்களின் தேசிய அடையாளங்களில் ஒன்று என்ற அந்தஸ்தை ஒருபோதும் இழந்துவிடாது. அது யார் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதுபோன்று ஆண்டுதோறும் கார்த்திகையில் மொட்டவிழ்ந்துக் கொண்டுதான் இருக்கிறது. இவை காரணமாகவே கார்த்திகை மாத மரநடுகை விழாக்களில் கார்த்திகைப்பூச்சூடுவதை நாம் வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறோம். இதன்மூலம் எமது சுற்றுச்சூழல் பற்றியும் வரலாறு பற்றியும் இளைய தலைமுறைகளுக்கு நாம் எடுத்தியம்புகிறோம்.

கார்த்திகைப்பூவை அதிலுள்ள நஞ்சு காரணமாக நிராகரிப்பவர்களும் இருக்கிறார்கள். பூக்கும் தாவரங்கள் எல்லாமே ஏதோவொரு அளவில் ஏதோவொரு நஞ்சை எதிரிகளிலிருந்து தங்களைத் தற்காத்துக்கொள்வதற்காகக் கொண்டிருக்கின்றன. கார்த்திகைப் பூச்செடியிலுள்ள நஞ்சு, மருந்தாகவும் பயன்படுகிறது. இதனால், தமிழகத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் கார்த்திகைப் பூச்செடி பயிரிடப்படுகிறது. பலகோடி ரூபாக்கள் அந்நியச் செலாவணியாகக் கிடைக்கிறது. நாமும் கார்த்திகை பூச்செடிகளை பெரும்பண்ணைகளாக அமைக்க முன்வரவேண்டும் என்றும் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அர(ச/சு) பயங்கரவாதத்தைக் கைவிடுதல்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஒரு முக்கிய தீர்மானம் கவனிப்புக்குரியதாகின்றது.

காலிமுகத்திடலிலும் அலரிமாளிகைக்கு வெளியேயும் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு, கடந்த வெள்ளிக்கிழமை வரை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு மாணவ தலைவர்களான அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே மற்றும் அனைத்து பல்கலைகழக பிக்குமார் மாணவர் ஒன்றியத் ஏற்பாட்டாளர் கல்வேவ ஸ்ரீதம்மதேரர் ஆகியோரைத் தொடர்ந்தும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைப்பதற்கான உத்தரவில் கையெழுத்திட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மறுத்து விட்டார்.

அவர்கள் இனி சாதாரண சட்டங்களின் கீழ் கையாளப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நல்ல முடிவு. எனினும் இது காலம் கடந்த ஞானம் தான். முதலில் அந்த மாணவத் தலைவர்கள் இருவரையும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்ததே தவறு. அப்படியான கைது ஒரு வகையில் அரச பயங்கரவாதம்தான் என்பதை மறுப்பதற்கில்லை.

முன்னைய ஆட்சிப் பீடத்தை வெளியேறக் கோரி மக்கள் நடத்திய போராட்டத்தில் இந்த இரு மாணவ தலைவர்களும் பங்காளிகள். அவர்களைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்தமை அந்த மக்கள் போராட்டத்தையே பயங்கரவாத நடவடிக்கையாக அர்த்தம் பண்ணும் என்பது அந்தப் போராட்டம் காரணமாகப் பதவிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு புரியாமல் போனமை ஆச்சரியம்தான்.

அவர்கள் இருவரும் புரிந்தவை பயங்கரவாதம் தானா என்று விசாரிப்பதற்காகத்தான் அவர்கள் அந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர் என்று ஜனாதிபதி ரணில் தரப்பு ஆரம்பத்தில் கொடுத்த வியாக்கியானம் சுத்த அபத்தம். அத்தோடு அரசியல் ரீதியாகப் படு முட்டாள்தனமான விளக்கமும் கூட.

அந்த மோசமான வரலாற்றுத் தவறைப் புரிந்து கொண்டு அதைத் திருத்துவதற்கு 90 நாள்கள் எடுத்தமை அதைவிட மோசமான மெத்தனமாகும்.

இப்போது பெரும் நெருக்கடியில் வீழ்ந்துள்ள இந்த நாடு அந்தப் பொருளாதாரப் பின்னடைவில் இருந்து மீளெழுச்சி கொள்வதற்கு எடுக்கும் முயற்சிகளுக்கு, இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் எத்துணை இடையூறானது என்பதை தென்னிலங்கை பௌத்த, சிங்களப் பேரினவாதம் இப்போது தான் காலம் பிந்தி உணரத் தலைப்பட்டிருக்கின்றது. இவ்வளவு காலமும் அதன் மூளை மையத்தை ஆகர்ஷித்து, சூழ்ந்து நின்ற பேரினவாத மேலாதிக்க மேலாண்மை போக்கு, உண்மையைத் தென்னிலங்கையின் கண்களுக்கு மறைத்திருந்தது.

இந்தச் சட்டத்தை அரசு பயன்படுத்துவது ஒரு வகையில் அரச பயங்கரவாதம்தான். காலம் பிந்தியவது அதைத் தென்னிலங்கை உணர்ந்து திருந்த முயல்வது நல்ல சமிக்ஞையே.

## பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண ஆளும்கட்சி தடை!

### மைத்திரி குற்றச்சாட்டு



பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண சகல கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் சர்வ கட்சி அரசாங்கத்தை அமைக்கும் செயற்பாட்டுக்கு பிரதான ஆளும் கட்சி தடையாக இருப்பதாக மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான நான்காவது நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பொருளாதாரக் கட்டமைப்பில் காணப்படும் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் எனில் முக்கிய நிறுவனங்கள் சுயாதீனமாகச் செயற்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் பொருளாதாரப் பாதிப்பிற்கு யார் காரணம் என ஆராயாமல் எதிர்காலம் தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும் என்றும் மைத்திரிபால சிறிசேன கேட்டுக்கொண்டுள்ளார்.

சர்வக்கட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்க கோட்டாபய ராஜபக்ஷவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பொறுப்புடன் செயற்பட்டாலும் ஆளும்கட்சி முட்டுக்கட்டை போடுவதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

## நாட்டின் எதிர்காலம் குறித்து கவலைப்பட வேண்டி ஏற்படும்

### பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஆரூடம்



அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே மற்றும் அனைத்து பல்கலைக்கழக பிக்கு ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் சிறிதம்ம தேரர் உள்ளிட்டவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்து அவர்களை பழிவாங்கும் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. இருப்பினும் நிச்சயம் இதன் பின்விளைவுகளை எதிர்காலத்தில் அரசாங்கம் அனுபவிக்கும் என்றும் அதனை கண்டு நாம் கவலைப்பட வேண்டிய தருணமொன்று ஏற்படும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கொழும்பு புதிய மெகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வசந்த முதலிகே மற்றும் சிறிதம தேரரை பார்ப்பதற்காக சென்றிருந்த போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறிதம்ம தேரரைப் பார்ப்பதற்கான அனுமதி வழங்கப்படவில்லை. இதனைப் பார்க்கும் போது அரசாங்கத்தால் பழிவாங்கும் செயற்பாடே முன்னெடுக்கப்படுகிறது என்பது தெட்டத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

மேலும், வசந்த முதலிகே மற்றும் சிறிதம்ம தேரர் தொடர்பான வழக்கு விசாரணைகளின் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஓரிரு மாதங்களில் கிடைக்கும் என்பதை உறுதியாக கூறமுடியாது. மேற்படி கைதுகள் அநீதியான, சட்ட ரீதியற்ற, பழிவாங்கல் நடவடிக்கைகளாக நாம் காண்கிறோம்.

இந்நிலையில் இந்த அரசாங்கம் ஆட்சியில் இருக்கும் வரையில் அரசாங்கத்துக்கு எதிராக இளைஞர், யுவதிகளால் மேற்கொள்ளப்படும் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் எதிர்ப்புகளுக்கு நாம் ஆதரவாக செயல்படுவோம்.

அரசாங்கம் இதுபோன்ற கைதுகளை மேற்கொண்டுஅவர்களைசிறையில் அடைத்து அவர்களின் தலைவிதியை மாற்ற முடியாது. மேலும் அரசாங்கத்தின் இவ்வ றான செயற்பாடுகள் காரணமாக நிச்சயமாக எதிர்காலத்தில் வருந்தும். இதனை கண்டு நாம் கவலைப்பட வேண்டி ஏற்படும் என்றார்.

## இலங்கை விமானப் படைக்கு அரச நிறுவனங்களால் நஷ்டம்!

தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையின் படி, பத்து அரச நிறுவனங்களும், இரண்டு தனியார் நிறுவனங்களும் விமானங்களை வாடகைக்கு வாங்கி பின்னர் இலங்கை விமானப்படைக்கு கிட்டத்தட்ட ஒரு கோடியே முப்பது லட்சம் ரூபாவை செலுத்த தவறியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொகை மூன்றாண்டுகளாக மீட்கப்படவில்லை என்றும் அறிக்கை தெரிவித்துள்ளது.

தேசிய தணிக்கை அலுவலகம் பண ஒழுங்கு முறை 128 (2) இன் படி இந்த வருவாயை தாமதமின்றி வசூலிக்க ஏற்பாடுகள் செய்யுமாறு பரிந்துரைத்துள்ளது.

விமானப்படைக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு உத்தரவிடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.



## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022

"இந்த உலகத்தில் அழகானது எதுவுமே இல்லை என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். எப்போதும் உங்களை ஆச்சரியப்படுத்தும் அளவுக்கு ஒரு மரத்தின் தோற்றத்தில், ஒரு இலையின் அசைவில் ஏதோவொன்று இருக்கும்"

- அல்பேட் சுவைற்சர் -

(பிரான்ஸ் தத்துவவியலாளர் - சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவர்)

# மத்திய வங்கியின் செயற்பாடுகளை சுயாதீனப்படுத்தும் சட்டமூலத்தை விரைவாக சமர்ப்பிக்க சஜித் வலியுறுத்து!



மத்திய வங்கியை கொள்ளையடித்தவர்கள் மீண்டும் தமது ஆதரவாளர்களை மத்திய வங்கியில் அமர்த்தி மிகுதியாக இருப்பதையும் கொள்ளையடிக்க முயற்சிக்கிறார்கள்.

மத்திய வங்கியின் செயற்பாடுகளை சுயாதீனப் படுத்தும் வகையிலான சட்டமூலத்தை விரைவாக நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்குமாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் வலியுறுத்தினார்.

மத்திய வங்கியை சுயாதீனப்படுத்தும் சட்டமூலத்தை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளன. சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோனை கோரப்பட்டுள்ளன. வெகுவிரைவில் சட்ட மூலம் சபைக்கு சமர்பிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க எதிர்க்கட்சித் தலைவருக்குப் பதிலளித்தார்.

சபாநாயகர் தலைமையில் இடம்பெற்ற நாடாளுமன்ற கூட்டத்தொரின் போது எதிர்க்கட்சிதலைவர் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டவை வருமாறு –

மத்திய வங்கியைக் கொள்ளையடித்தவர்கள் மீண்டும் தமது ஆதரவாளர்களை மத்திய வங்கியில் அமர்த்தி மிகுதியாக இருப்பதையும் கொள்ளையடிக்க முயற்சிக்கிறார்கள். அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.

கடந்த காலங்களில் மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் தற்போதைய பிரதமர் அப்போது சபையில் ஆற்றிய உரையை அவர் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்பதை அவரிடம் வலியுறுத்துகிறேன். விமர்சனங்களுடன் ஒன்றிணைய வேண்டிய நிலை அவர்களுக்கு இன்று ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சிக்கு புண்ணியம் கிடைக்கும் வகையில் தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்கு வருகை தந்துள்ளவர் மத்திய வங்கியின் செயற்பாடுகளை விமர்சிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

மத்திய வங்கியை சுயாதீனப்படுத்தும் வகையிலான சட்டமூலத்தை நாடாளுமன்றத்துக்கு விரைவாகக் கொண்டு வாருங்கள். அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவு வழங்கியதைப் போன்று அந்த சட்டமூலத்திற்கும் ஆதரவு வழங்குவோம். – என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய நிதி இராஜாங்க அமைச்சர் செஹான், மத்திய வங்கியை சுயாதீனப் படுத்தும் வகையிலான சட்டமூலத்தை தயாரிப்பதற்கான ஆலோசனை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளது. ஆகவே வெகுவிரைவில் அந்த சட்டமூலம் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும். – என்றார்.

# இலங்கை பணிப்பெண்கள் விற்கப்பட்ட விவகாரம் நாட்டின் தேசிய பிரச்சினை!

## ஆராய ஓமான் விரைந்தது குழு என்கிறார் பிரதமர்

இலங்கை பணிப் பெண்கள் ஓமானில் விற்கப்பட்ட விவகாரம் தேசிய பிரச்சினையாகக் கருதப்படும். இந்த விவகாரம் தொடர்பில் ஆராய விசேட குழு ஓமான் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பாரபட்சமின்றிய வகையில் முறையான விசாரணைகள் எடுக்கப்படும் என பிரதமர் தினேஷ் குணவர்தன சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இலங்கை பணிப்பெண்கள் ஓமான் நாட்டில் பகிரங்க ஏலத்திற்கு விற்கப்பட்ட விவகாரம் தொடர்பில் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

இலங்கை பணிப்பெண்கள் ஓமான் நாட்டில் நெருக்கடிக்குள்ளான விவகாரம் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார். இந்த விவகாரம் தொடர்பில் ஆராய விசேட குழுவினர் ஓமான் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களில் ஒரு சிலர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்கள். இலங்கை பணிப்பெண்கள் இவ்வாறான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளமை தேசியப் பிரச்சினையாகக் கருதப்படும். இதனுடன் தொடர்புடையவர்களுக்கு எதிரான விசாரணை பாரபட்சமின்றிய வகையில் முன்னெடுக்கப்படும். – என்றார்.

சுமார் ஒன்பதரை லட்சம் இலங்கை பணிப் பெண்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து முறையாக மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொண்டுள்ளார்கள்.

ஆனால் 16 லட்சத்திற்கும் அதிகமானோர் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யாமல் முறையற்ற வகையில் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றுள்ளார்கள்.

வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்கள் தொடர்பில் அந்த நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

அதற்கான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் இலங்கையர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடி தொடர்பில் ஆராயவும் முறையற்ற வகையில் வெளிநாடுகளுக்கு செல்வதை தடுக்கவும் புதிய சட்டம் உருவாக்கப்படும். – என்றார்



# ஏனைய நாடுகளுக்கு கஞ்சா சிறந்ததென்றால் ஏன் நாம் அதற்கு அங்கீகாரம் வழங்கக்கூடாது?

## டயனா கமகே கேள்விக்கணை



கலாசாரம், பாரம்பரியம் என்ற காரணிகளைக் காலங்காலமாக குறிப்பிட்டுக்கொண்டு நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுசென்றது மாத்திரம் மிகுதியாகியுள்ளது.

ஏனைய நாடுகளுக்கு கஞ்சா சிறந்ததாயின், ஏன் நாம் அதற்கு அங்கீகாரம் வழங்கக்கூடாது என நாடாளுமன்ற உறுப்பினர் டயனா கமகே சபையில் வலியுறுத்தினார்.

தாய்லாந்து தேரவாத பௌத்த நாடு. ஆனால், அவர்கள் கஞ்சாவை பயிர்ச்செய்கை செய்து முன்னேற்றம் அடைந்துள்ளார்கள். ஆனால், நாம் புதையலுக்கு மேல் இருந்துகொண்டு பிற நாடுகளிடம் கையேந்தி இன்று வங்குரோத்து நிலையை அடைந்துள்ளோம்.

இனியாவது இதனை திருத்திக்கொள்ள வேண்டும். விமர்சனங்களை மாத்திரம் முன்வைக்கும் எதிர்க்கட்சியினரின் கருத்துகளுக்கு ஒருபோதும் அடிபணியப் போவதில்லை எனவும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

கஞ்சா பயிர்ச்செய்கையை சட்டபூர்வமாக்குவதற்கு போராடினேன். எனது போராட்டம் தொடர்பாக அவதானம் செலுத்தி, கஞ்சா பயிர்ச்செய்கை தொடர்பில் குழு ஒன்றை நியமிக்க ஜனாதிபதி வரவு – செலவுத் திட்டத்தில் பரிந்துரைத்துள்ளமை வரவேற்கத்தக்கது.

கஞ்சா பயிர்ச்செய்கையை சட்டபூர்வமாக்கி ஏற்றுமதி செய்து, அதனூடாக முதலீடுகளைப் பெற்றுக்கொள்ள முன்வைத்த யோசனைக்கு எதிராக எதிர்த்தரப்பின் உறுப்பினர்களும் ஆளுந்தரப்பின் ஒருசில உறுப்பினர்களும் எதிராகக் கருத்துரைப்பது கவலைக்குரியது.

உலக நடப்புக்களை சற்று ஆராய்ந்து பாருங்கள். கஞ்சா பயிர்ச்செய்கையால் கிடைக்கும் வருமானம் பற்றி சிந்தியுங்கள்.

தாய்லாந்து கடந்த ஜூன் மாதம் கஞ்சா பயிர்ச்செய்கையை சட்டபூர்வமாக்கியது. இதற்கான யோசனையை அந்த நாட்டின் சுகாதாரத்துறை அமைச்சர் முன்வைத்தார்.

நிறைவடைந்த ஐந்து மாத காலத்துக்குள் கஞ்சா பயிர்ச்செய்கை ஊடாக தாய்லாந்து 2 ஆயிரத்து 800 கோடி டொலர் வருமானத்தை பெற்றுக்கொண்டுள்ளது. அத்துடன் 2023ஆம் ஆண்டு காலப்பகுதியில் 4 ஆயிரத்து500கோடிடொலர்வருமானத்தைபெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளார்கள்.

நாடு என்ற ரீதியில் மோசமான நெருக்கடியைத் தற்போது எதிர்கொண்டுள்ளோம். இந்நிலையில் இருந்து மீள வேண்டுமாயின், இவ்வாறான தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்காகவே ஜனாதிபதி எனது திட்டத்துக்கு கவனம் செலுத்தியுள்ளார்.

கஞ்சா தொடர்பில் முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்ட கருத்தை வரவேற்கிறேன். கஞ்சா பயிர்ச்செய்கையால் கிடைக்கும் வருமானம் மற்றும் ஆயுர்வேத நலன் தொடர்பில் முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன எதிர்க்கட்சியின் உறுப்பினர்களுக்கு விசேட வகுப்பு நடத்த வேண்டும் என அவரிடம் கேட்டுக்கொள்கிறேன்.

கலாசாரம், பாரம்பரியம் என்ற காரணிகளை காலங்காலமாகக் குறிப்பிட்டுக்கொண்டு நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுசென்றது மாத்திரம் மிகுதியாகியுள்ளது.

ஏனைய நாடுகளுக்கு கஞ்சா சிறந்ததாயின், ஏன் நாம் அங்கீகாரம் வழங்கக்கூடாது. தாய்லாந்து தேரவாத பௌத்த நாடு. ஆனால், அவர்கள் கஞ்சாவைப் பயிர்ச்செய்கை செய்து முன்னேற்றம் அடைந்துள்ளார்கள். ஆனால், நாம் புதையலுக்கு மேல் இருந்துகொண்டு பிற நாடுகளிடம் கையேந்தி இன்று வங்குரோத்து நிலையை அடைந்துள்ளோம். இனியாவது இதனைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

தாமரை கோபுரத்தை வெள்ளை யானை என விமர்சித்தார்கள். தாமரை கோபுர நிர்மாணிப்புக்கு 11 கோடியே 40 லட்சம் டொலர் செலவிடப்பட்டுள்ளது. 8 கோடியே 70 லட்சம் டொலரை சீனா வழங்கியுள்ளது. சீனாவுக்கு 6 கோடியே 70 லட்சம் டொலர் செலுத்தப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் சீனாவுக்கு அந்த கடனை திருப்பிச் செலுத்த வேண்டும். தாமரை கோபுரத்தை ஒன்றிணைத்த 100 கோடி டொலர் முதலீட்டுக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

நான் முதலீட்டை கொண்டு வந்தேன். சுற்றுலாத் துறைக்கு தேவையான முதலீடுகளை நாட்டுக்காகக் கொண்டு வருவேன்.

ஊழல் மோசடி தொடர்பில் எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவரால் கலாசார நிதியம் மோசடி செய்யப்பட்டமை பற்றிப் பேசுங்கள்.

300 கோடி ரூபா மோசடி செய்யப்பட்டதை மறைக்கக் கூடாது. அரச அதிகாரிகளால் இடம்பெற்ற மோசடிகளை எதிர்வரும் காலங்களில் பகிரங்கப்படுத்துவோம்.

எனக்கு எதிராகத் திட்டமிட்ட வகையில் சேறுபூசல்கள் முன்னெடுக்கப்படுகின்றன. போலியான குற்றச்சாட்டுகளுக்கு ஒருபோதும் அஞ்சப் போபவனல்லன்.

ஐக்கிய மக்கள் சக்தியின் புண்ணியத்தால் நான் நாடாளுமன்றத்துக்கு வருகை தந்ததாக எதிர்க்கட்சி தலைவர் குறிப்பிடுகிறார். என் புண்ணியத்தில் அவர் நாடாளுமன்றத்துக்கு வருகை தந்துள்ளமை அவர் அறியவில்லை.

ஆகவே, விமர்சனங்களை மாத்திரம் முன்வைக்கும் எதிர்க்கட்சியின் கருத்துகளுக்கு ஒருபோதும் அடிபணியப் போபவனல்லன். – என்றார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# போதைப்பொருள் உடலில் ஏற்படுத்தும் மனமாற்றங்கள்!



மருத்துவர் சி. யமுனாநந்தா

போதைப்பொருள்கள் மன மாற்றிகளாக அமைகின்றன. இதன் பாவனை ஒருவரின் உணர்வுகளில், உடற்றொழிலியல் செயற்பாடுகளில், உளநிலையில், ஆன்மீக நிலையில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. போதைப்பாவனை மனிதனின் விழிநிலையிலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

சாதாரணமான ஒருவர் ஒரு தடவை போதைப்பொருளை உபயோகித்தாலேயே அவரது மூளையின் கட்டமைப்பு நிரந்தரமாகப் பாதிக்கப்படும். இதனால் ஒருவரின் மன உணர்வு நிலைகள் மாறுபடும். ஞாபகசக்தி பாதிக்கப்படும். மேலும் போதைப் பொருளுக்கு அடிமையாதலும், அது அடுத்த சந்ததிக்கு கடத்தப்படலும் போதைப் பொருள் பாவிக்கும் போது பரம்பரையலகுகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தும்.

மனிதமூளையின் நரம்புக்கலங்களின் கணத்தாக்கப் பாதையில் சில கதவுகளை போதைப் பொருள்கள் கட்டுப்படுத்துகின்றன. வரலாற்றுக் காலம் முதல் தற்போது வரை பல்வேறு வகையான போதைப்பொருள்கள் பாவனையில் இருந்துள்ளன. ஆரம்பத்தில் இயற்கை மூலிகைகளிலும், காளான்களிலும் இருந்து மனிதன் போதையைப் பெற்றான். இன்று செயற்கையான இரசாயனங்கள் மூலமும் மருந்துகள் மூலமும் போதையை அதிகம் பெறுகின்றான்.

### போதைப்பொருள் பாவனை ஏற்படுத்தும் அசாதாரண மாற்றங்கள்

1. புலனுணர்வு மாற்றங்கள்
2. எண்ண மாற்றங்கள்
3. பேச்சு மாற்றங்கள்
4. ஞாபக மாற்றங்கள்
5. உணர்வுகளில் மாற்றங்கள்



6. தன்னை உணர்வதில் ஏற்படும் மாற்றங்கள்
7. விழிப்புணர்வில் ஏற்படும் மாற்றங்கள
8. உடலியக்கத்தில் ஏற்படும் மாற்றங்கள்
9. அசாதாரண சுபாவங்கள்
10. பாலியல் கோளாறுகள்

### புலனுணர்வில் ஏற்படும் மாற்றங்கள்

புலன்கள் திரிவுபடல், செறிவு மாறுபடலாக அமையலாம், அளவு மாறுபடலாக அமையலாம், வடிவம் மாறுபடலாக அமையலாம்.

தவறான புலனுணர்வுத் தன்மையால் மாயத் தோற்றங்கள் அமையலாம், மாயப் புலனுணர்வாக அமையலாம், கேட்டல் தன்மை, முன்னிலை, படர்க்கையில் நிகழும் பார்வைப்புலன் உருவங்கள் தெரிதல் நிலைகள் ஏற்படும்.

காலத்தை உணர்தல் சந்தோசமான நிலையாகக் காலம் குறுகிக் காணப்படும். இந்நிலையில் பாலியல் வல்லுறவுகள் மேற்கொள்ளலாம். துக்கமான நிலையில் காலம் நீண்டு காணப்படும் இந்நிலையில் தற்கொலை முயற்சிகள் மேற்கொள்வர்.

### போதைப்பொருள் பாவனை எண்ணங்களில் ஏற்படுத்தும் மாற்றங்கள்

சாதாரணமானவர்களின் எண்ணங்கள் அவர்களின் புத்திக்கூர்மை, கலாசாரம், அனுபவம், அவர்களின் வாழும் காலம் என்பனவற்றில் தங்கி உள்ளது. எண்ணங்கள் தர்க்கரீதியானதாகவும் இருக்கலாம். கற்பனையாகவும் இருக்கலாம். போதைப்பாவனையில் எண்ணங்களில் விகாரம் ஏற்படும்.

அவையாவன –

எண்ணங்கள் உருவாகுவதில் மாற்றங்கள் ஏற்படும்.

எண்ணங்கள் விரைவாகத் தோன்றலாம்.

எண்ணங்கள் மந்தமாகத் தோன்றலாம்.

எண்ணங்கள் மீளமீளத் தோன்றலாம்.

போதைப்பாவனையில் எண்ணங்களின் தொடர்ச்சியில் மாற்றங்கள் ஏற்படலாம்.

எண்ணங்கள் நிலைத்து நிற்கலாம் அல்லது தடைப்படலாம் அல்லது ஒரு எண்ணத்துடன் மற்றைய எண்ணம் கலக்கலாம் அல்லது இணையலாம்.

அன்றேல் எண்ணங்கள் தடம் மாற லாம்.

ஒருகணத்தில் பல எண்ணங்கள் உருவாகலாம்.



போதையில் எண்ணத்தின் நிலையில் மாற்றங்கள் ஏற்படலாம். ஒரே எண்ணம் திரும்பத் திரும்ப வரலாம். வேற்று எண்ணங்களில் தொடர்புகள் ஏற்படலாம். எண்ணங்கள் உட்புகலாம். எண்ணங்கள் அகற்றப்படலாம். போதையில்எண்ணத்தின்உள்ளடக்கத்திலும் மாற்றங்கள் ஏற்படலாம். சந்தேக எண்ணம், குற்ற எண்ணம், வெறுமை எண்ணம், பாலியல் எண்ணங்கள், பொறாமை எண்ணம் என்பன ஏற்படலாம்.

போதையில் எண்ணங்கள் உருவாகுவதில் தொடர்ச்சியின்மை, கட்டமைப்பின்மை, உள்ளடக்கம் மாறல் என்பவை காணப்படும். போதையில் பேச்சுத்தடங்கல் ஏற்படும். சொற்களின் கலவை காணப்படும். போதையில் உடனடிஞாபகம், குறுகியஞாபகம் என்பன பாதிக்கப்படும்.



போதையில் உணர்வெழுச்சிகள் அசாதாரணமாக வெளிக்காட்டப்படலாம்.

போதையில் தன்னை உணர்தலில் தனது கட்டமைப்பை உணர்தலில், தனது தொடர்ச்சியை உணர்தலில், தனது எல்லையை உணர்தலில் தவறுகள் ஏற்படலாம்.

போதை விழிப்புணர்வில் மாற்றத்தை ஏற்படுத்தும். நித்திரை, ஆழ்தூக்கம் ஏற்படலாம். சோம்பல், மப்பு, மயக்கம் என்பன ஏற்படலாம். விழிப்புணர்வு அற்ற நிலையாக இறப்பும் ஏற்படலாம்.

போதைப்பொருள் பாவனை உடலியக்கத்திலும் அசாதாரணமான மாற்றத்தை ஏற்படுத்தும்.

போதைப் பாவனை சந்தேகப்படும் சுபாவம், துன்புறுத்தும் சுபாவம் என்பவற்றை அதிகரிக்கும்.

பாலியல் கோளாறுகள் போதைப் பாவனையில் அதிகரிக்கலாம். சாதாரணவிலகல் நடத்தைகள், கலாசாரவிலகல் நடத்தைகள், தனிமனித விலகல் நடத்தைகள் என்பன அதிகரிக்கும்.

போதைப்பொருள் பாவனைக்கு உள்ளாவோரில் அநேகர் மனநோயால் பாதிக்கப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர். இவர்களில் பதகளிப்பு நோய், மனச்சோர்வுநோய், உளப்பிளவை நோய், மதுபானம், புகைப்பிடித்தல் போன்ற பழக்கவழக்கங்கள் காணப்படுகின்றன. போதைப் பொருள்களின் மருத்துவத்தன்மையும் அதன் குறுகிய வீச்சிலான பிரயோகமும் எதிர்காலத்தில் போதை தொடர்பான சமூகத் தாக்கத்தைத் தணிக்க உதவும். இது தொடர்பான பிரயோக மருத்துவம் விரிவடைதல் போதைப் பாவனைக் கட்டுப்பாட்டில் அவசியம்.

# பிரபாகரனின் கொள்கையை பின்பற்றும் எதிர்க்கட்சியினர்!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சாடல்



ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற பிரபாகரன் பின்பற்றிய கொள்கையை தற்போதைய எதிர்க்கட்சியினர் பின்பற்றுகிறார்கள். மக்களாணையுடன் ஆட்சிக்கு வர முடியாதவர்கள் போராட்டத்தைத் தூண்டிவிட்டு அதனூடாக இலாபமடைய முயற்சிக்கிறார்கள்.

குறுகிய அரசியல் நோக்கத்துக்காக வன்முறைக்கு துணை சென்றதால் ஏற்படும் இறுதி விளைவை எதிர்க்கட்சி தலைவர் விளங்கிக்கொள்ள வேண்டும்.

பொருளாதாரத்தை மேலும் பாதிப்புக்கு உள்ளாக்கும் வகையில் போராட்டத்தை தூண்டிவிடுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என ஆளுந்தரப்பின் பிரதம கொறடா பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

மத்திய வங்கியின் மோசடி விவகாரத்தில் இருந்து ஐக்கிய மக்கள் சக்தியின் ஒருசில உறுப்பினர்களும் விடுபட முடியாது.

ஒருசிலர் 9 ஆவது நாடாளுமன்றத்துக்குத் தெரிவானவர்களை போல் கருத்துரைக்கிறார்கள். இவர்களின் பெற்றோரும் இந்த நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கிறார்கள்.

இன்று அனைத்துதவறுகளும் ஒன்று சேர்ந்துள்ளது. முழு நாடாளுமன்றத்தையும் மலினப்படுத்தும் வகையில் கருத்துரைப்பதை எதிர்த்தரப்பின் உறுப்பினர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

நாடு பாரிய சவால்களை எதிர்கொண்டுள்ள பின்னணியில் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் சமர்ப்பித்துள்ளார் என்பதை மறந்துவிடக்கூடாது.

நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளபோது தான் வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சவால்களைப் பொறுப்பேற்காமல் தலைமறைவானவர்களுக்கு மத்தியில் சவால்களை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதிக்கு கட்சி என்ற ரீதியில் முழுமையான ஒத்துழைப்பை வழங்கியுள்ளோம்.

எரிபொருள், எரிவாயு மற்றும் விநியோக கட்டமைப்பில் பாதிப்பு ஏற்பட்ட நிலையில், நாடு பாரிய நெருக்கடியை எதிர்கொண்ட வேளை அரசாங்கத்தை பொறுப்பேற்க மறுப்பு தெரிவித்த கட்சித் தலைவர்களுக்கு மத்தியில் தனி நபராக இருந்து ஜனாதிபதி அனைத்து சவால்களையும் பொறுப்பேற்றார்.

அரசியல் கொள்கைகளைப் புறக்கணித்து தேசிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கியுள்ளோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எமது அரசியல் பிரதிவாதி, அரசியல் ரீதியில் பாரிய வேறுபாடு காணப்படுகிறது. இருப்பினும், தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் தேசிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்பதற்காக ஜனாதிபதியுடன் ஒன்றிணைந்து செயற்பட்டுள்ளோம் என்பதை பொதுஜன பெரமுன என்ற அடிப்படையில் பெருமையுடன் குறிப்பிட்டுக்கொள்கிறோம். நாட்டுக்காக அரசியல் தியாகம் செய்துள்ளோம்.

ஆடை அணிந்துகொண்டா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைந்துள்ளீர்கள் என எதிர்த்தரப்பினர் எம்மிடம் கேட்கிறார்கள். தற்போதைய நிலையில் ஆடை அணிவதும், அணியாததும் முக்கியமல்ல.

தற்போதைய இக்கட்டான நிலைக்கு தீர்வு காண வேண்டும் என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளோம்.

பொருளாதாரத்தையும் நெருக்கடிகளையும் வெற்றி கொள்ளும் திட்டங்களை முன்வைத்தால் மறுகணமே அமைச்சுப் பதவிகளில் இருந்து விலகத் தயாராகவுள்ளோம்.

ஜனநாயக முறை ஊடாகவே முறைமை மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வன்முறை ஊடாக முறைமை மாற்றத்துக்கு முற்பட்டார்கள்.

நாங்கள் எமது அரசியல் கொள்கையை மாற்றியமைத்துக்கொண்டோம். எதிர்த்தரப்பு அரசியல் பிரதிவாதியுடன் ஒன்றிணைந்துள்ளோம்.

பொருளாதாரப் பாதிப்புக்கு அரச அதிகாரிகளும் பொறுப்பேற்க வேண்டும். அரச நிர்வாகம் முறையாக இடம்பெற வேண்டும் என்பதற்காக கோபா மற்றும் அரச நிதி தொடர்பான குழுவின் தலைமைத்துவ பதவி எதிர்க்கட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் புதிதாக ஸ்தாபிக்கப்படவுள்ள மூன்று பிரதான தெரிவுக்குழுக்களின் முக்கிய பதவிகளை எதிர்க்கட்சிகளுக்கு வழங்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

ஆகவே, நாடாளுமன்றத்தின் ஊடாக முறைமை மாற்றத்தை ஏற்படுத்த ஆரம்பக்கட்ட நடவடிக்கை எடுத்துள்ளோம்.

குறுகிய அரசியல் நோக்கங்களை முன்னிலைப்படுத்தி ஒருசில அரசியல் கட்சிகள் முறையற்ற வகையில் செயற்படுகின்றன.

தீர்க்கமான நிலையில் எதிர்க்கட்சி தலைவருக்கு முக்கிய பொறுப்பு உண்டு. பிரச்சினைக்கு தீர்வு காண்பதா அல்லது பிரச்சினைகளைத் தீவிரப்படுத்துவதா என்பதை எதிர்க்கட்சி தலைவர் தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

பொருளாதார மீட்சிக்கான திட்டங்களைத் தடுக்கும் வகையில் எதிர்க்கட்சியினர் செயற்படுவார்களாயின், அது நாட்டு மக்களுக்கு இழைக்கும் துரோகமாகக் கருதப்படும்.

ஆகவே, குறுகிய அரசியல் நோக்கத்தில் செயற்படும் போது ஏற்படும் விளைவுகளை எதிர்க்கட்சி தலைவர் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை செயற்படுத்த முயற்சித்தபோது அப்போதைய பிரதமர் ரணசிங்க பிரேமதாஸ, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ரோஹன விஜயவீரவுடன் ஒன்றிணைந்து தெற்கில் சிவில் கலவரத்துக்கு வழியேற்படுத்திக் கொடுத்தார்.

விடுதலைப்புலிகள் அமைப்புக்கு, முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ ஆயுதம் வழங்கியமை அனைவரும் அறிந்ததே.

இறுதியில் நேர்ந்தது என்ன? விடுதலைப்புலிகள் அமைப்பின் தற்கொலை குண்டுதாரியால் ரணசிங்க பிரேமதாஸ படுகொலை செய்யப்பட்டார்.

ஆகவே, குறுகிய அரசியல் நோக்கம் அரசியல் போராட்டமாகும்.

பொருளாதார நெருக்கடிக்கு கட்டம் கட்டமாக தீர்வு எட்டப்படும் நிலையில் தற்போது ஒரு தரப்பினர் வீதியில் 'ரணில் ரணில்' என கூக்குரலிட்டு போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். இது பயனற்ற போராட்டமாகும்.

எதிர்க்கட்சித் தலைவர், முன்னிலை சோசலிச கட்சியினரையும், வன்முறை போராட்டக்காரர்களையும் தூண்டி விடுகிறார். இது வரலாற்றில் பதியப்படும்.

மாணவர்களின் போராட்டத்தை அரசாங்கம் முடக்குவதாக எதிர்த்தரப்பினர் குறிப்பிடுகிறார்கள். கடந்த மே 09ஆம் திகதி முதல் நாட்டில் ஜனநாயகப் போராட்டத்தில் எவரும் ஈடுபடவில்லை.

மக்கள் ஆதரவுடன் ஆட்சிக்கு வர முடியாதவர்கள் போராட்டத்தின் ஊடாக ஆட்சியைக் கைப்பற்ற முயற்சிக்கிறார்கள். பிரபாகரனும் இவ்வாறே செயற்பட்டார். போராட்டத்தின் ஊடாகவே பிரபாகரனும் ஆட்சியைக் கைப்பற்ற முயற்சித்தார்.

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களை நாட்டுக்கு பணம் அனுப்ப வேண்டாம் என எதிர்க்கட்சியினர் குறிப்பிடுகிறார்கள்.

குறுகிய அரசியல் நோக்கத்தை விடுத்து நாட்டுக்காக ஒன்றிணைந்து செயற்படுமாறு எதிர்க்கட்சிகளிடம் தொடர்ந்து வலியுறுத்துகிறோம். எமது அரசாங்கத்தின் ஒருசில தீர்மானங்களால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது என்பதை மறுக்கவில்லை.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பொருளாதாரப் பாதிப்பை ஏற்படுத்தியதை எதிர்க்கட்சியினர் மறந்துவிட்டார்கள். ஆகவே, குறுகிய அரசியல் நோக்கத்தை விடுத்து எதிர்க்கட்சியினர் பொறுப்புடன் செயற்பட வேண்டும். – என்றார்.

## மலையகத்துக்கு வந்து ரணில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜயம் மேற்கொள்ள உள்ளேன். அங்கே வாருங்கள் சந்திப்போம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்னிடம் நேரடியாக கூறினார்.

வடகிழக்குக்கு வெளியே வாழும் தமிழ் மக்களது, பிரதான தலைமைக் கட்சியான எங்கள் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் எம்.பிக்கள் உங்களை கட்டாயம் சந்திப்பார்கள் என்று நான் அவருக்கு பதிலளித்தேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மலையகத்துக்கு வந்து அங்கே என்ன சொல்ல, செய்ய போகிறார் என்பதை தெரிந்துக்கொள்ள நானும் ஆவலாக இருக்கிறேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்திய வம்சாவளி மலையக தமிழர்களின் அரசியல் கோரிக்கைகள் தொடர்பிலும், இலங்கையிலேயே பின்தங்கிய பிரிவினராக ஐ.நா. சபையும், உலக வங்கியும் அறிவித்துள்ள பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதார நிலைமைகள் தொடர்பிலும் காத்திரமான காரியங்களை செய்ய வேண்டும் என எதிர்பார்க்கிறேன்.

வடக்கு கிழக்குக்கு வெளியே வாழும் தமிழர்களின் அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சார பிரச்சினைகளின் 'தள வேறுபாடு'களை இன்று ஐக்கிய நாடுகள் சபையே புரிந்துக்கொண்டு எம்முடன் தனியாகப் பேசுகிறது.

இதை ஜனாதிபதியும் புரிந்துக் கொண்டு எம்மிடம் பேச வேண்டும் என அவரிடம் ஏற்கனவே கூறி விட்டேன்.

ஆகவே வடக்கு, கிழக்கு வெளியே வாழும் தமிழ் மக்கள், குறிப்பாக மலையக தமிழ் மக்கள் தொடர்பில், பிரதான தலைமை கட்சியான தமிழ் முற்போக்கு கூட்டணி நிச்சயமாக சாதகமாக நடந்துக் கொள்ளும்.

வடக்கில் ஜனாதிபதி செயலக உப காரியாலயம் ஒன்றை திறந்து வைத்துள்ளார். நல்லது.

காணி, வீடமைப்பு, சுகாதாரம் தொடர்புகளில் பல்வேறு குழுக்களை அமைக்க போவதாக அறிவித்துள்ளார். இதுவும் நல்லதே.

ஆனால், இவை நடைமுறையாகி நல்லது நடக்குமானால் மாத்திரமே அங்கு வாழும் அப்பாவி தமிழ் உடன்பிறப்புகள் மகிழ்ச்சியடைவார்கள். நானும் மகிழ்ச்சியடைவேன்.

மலையகத்தில் ஜனாதிபதி ஆராய்ச்சி செய்ய வேண்டியதில்லை.

ஏற்கனவே, ஐ.நா. சபை பெருந்தோட்ட புறங்களில் உணவின்மை 43 விகிதம் எனவும், உலக வங்கி பெருந்தோட்ட புறங்களில் வறுமை 53 விகிதம் எனவும் கூறி உள்ளன.

ஐ.நா. விசேட அறிக்கையாளர் டோமோயா ஒபொகடா, பெருந்தோட்ட புறங்களில் நவீன கொத்தடிமை முறைமை இருப்பதாகவும், அதுவும் தொழிலாளர் என்ற காரணத்தைத் தாண்டி, சிறுபான்மை தமிழர் என்பதால் நிகழ்கிறது எனவும் அறிக்கை சமர்பித்துக் கூறி விட்டார்.

ஆகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மலையகம் வந்து, பிரச்சினைகளை தேடாமல், தீர்வுகளை அறிவிக்க வேண்டும் என எதிர்பார்க்கிறேன்.

அதுதான் துன்புறும் பெருந்தோட்ட மக்களை திருப்தியடைய செய்யும்.

200 வருடங்களாக உழைத்து நாட்டை உருவாக்கிய பெருந்தோட்ட மக்களின் இன்றைய நிலைமை பற்றி சர்வதேச சமூகம் சொல்லுவதை கேட்டு நம்நாட்டு ஜனாதிபதி பெருந்தோட்ட மக்களிடம் மன்னிப்புதான் கேட்க வேண்டும்.

அதை செய்யாவிட்டாலும், இனி விசேட உணவு வழங்கல் மற்றும் ஒதுக்கீட்டு திட்டங்களை அவர் அறிவிக்க வேண்டும் என கோருகிறேன்.

பெருந்தோட்ட மக்களின் உணவு பிரச்சினைகள் தொடர்பில் அரசுக்கு உதவ தாம் தயார் என ஐ.நா. சபை என்னிடம் கூறியுள்ளது. அவரிடமும் கூறி இருப்பார்கள்.

ஐ.நா. மற்றும் இந்திய நாட்டு உதவிகளைக் கோரி பெற்று பெருந்தோட்ட மக்களின் உணவு பிரச்சினைகளை முதலில் கவனியுங்கள். - என்றார் அவர்.

# இந்தியா - எமிரேட்ஸ் நாடுகளுக்கு இடையில் சிறப்புப் பொருளாதாரக் கூட்டுறவுக்கு வாய்ப்பு




சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்குவதில் இந்தியாவும் ஐக்கிய அரபு எமிரேட்ஸும் ஒத்துழைப்பதற்கும் முதலீட்டு வாய்ப்புகளை ஆராய்வதற்கும் பெரும் ஆற்றலைக் கொண்டுள்ளன என்று ராஸ் அல் கைமா பொருளாதார மண்டலத்தின் (RAKEZ) குழு தலைமை நிர்வாக அதிகாரி ராமி ஜல்லாட் கூறினார்.

அபுதாபியில் குளோபல் மீடியா காங்கிரஸின் வெளியீட்டுப் பதிப்பில் ஏ.என்.ஐயிடன் பேசிய ஜல்லாட், முதலீட்டில், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் இந்தியா பல தசாப்தங்களாக வர்த்தக பங்காளிகளாகவும், மிகவும் வலுவான வர்த்தக பங்காளிகளாகவும் உள்ளன என்று நான் நினைக்கிறேன். இரு தரப்பிலும் ஒரு முதலீட்டு வாய்ப்பு தாராளமாக உள்ளன - என்றார்.

"ராஸ் அல் கைமாவில் என்ன முதலீட்டு வாய்ப்புகள் உள்ளன என்பதை நான் அறிவேன், மேலும் எங்களிடம் ஏராளமான இந்திய தொழில் முனைவோர் அதிக தொழில்நுட்பம், புதிய வெப் 3, டிஜிற்றல் மாற்றம், உற்பத்தி, உயிர் அறிவியல், மருந்துகள், ரியல் எஸ்டேட் மேம்பாடு, பள்ளிகள் மற்றும் கல்வி போன்றவற்றில் முதலீடு செய்ய வருகிறார்கள். இவை மிகவும் முக்கியமானவை. - என்றார் அவர்.

இந்திய முதலீட்டாளர்கள் கல்வித் துறையில் முதலீடு செய்ய சிறந்த வாய்ப்பு இருப்பதாக ஜல்லாட் கூறினார்.

அவர் மேலும் கூறினார், இந்திய பாடத்திட்டக் கல்விக்கான தேவையை இங்கு நாங்கள் காண்கிறோம். ஏனென்றால் ஒரு பெரிய மக்கள் தொகையில் இந்தியர்கள் தங்கள் குழந்தைகள் சிறந்த பள்ளிகளில் படிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால் அதற்காக மீண்டும் இந்தியாவுக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை, எனவே இது ஒரு வணிக வாய்ப்பு மற்றும் முதலீடு என்று நான் நினைக்கிறேன். இந்திய கல்வி வெளிக்கான சரியான வாய்ப்பு - என்கிறார்.




உலகப் பொருளாதாரங்கள் இன்னும் தொற்றுநோயிலிருந்து மீண்டு வருவதால், பல புதிய தொழில்கள் உருவாகி வருவதாகவும், ஒத்துழைக்க பிரகாசமான வாய்ப்புகள் இருக்கின்றன எனவும் RAKEZ தலைவர் நம்புகிறார்.

அவர் கூறினார், கொவிட் உலகை மாற்றிவிட்டது. பல புதிய தொழில்கள் மற்றும் வளர்ந்து வரும் தொழில்கள் அதனால் வந்துள்ளன. குறிப்பாக வாழ்க்கை அறிவியல் மற்றும் வாழ்க்கை முறை வணிகங்களில் பிந்தைய கொவிட்டில் இன்னும் நிறைய சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோர் இப்போது வணிக உலகில் நுழைகிறார்கள் எனவே, இங்கு அல்லது இந்தியாவில் இருக்கும் பெரிய தொழில்களான தொழில்முனைவோர் மற்றும் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுடன் அதிக அளவில் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் தொழில் முனைவோர் வெளியே வந்து ஒத்துழைக்க ஒரு சிறந்த வாய்ப்பு உள்ளது என்று நான் நினைக்கிறேன்."

இந்தியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையே பொருளாதார மண்டலங்களுடனான சகோதர ஒப்பந்தங்கள் இரு நாடுகளிலும் வணிகங்களை மேம்படுத்த உதவும் என்று ஜல்லாட் கூறினார்.

அவர் கூறினார், உலகம் முழுவதும் உள்ள பொருளாதார மண்டலங்கள் குறிப்பிட்ட நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முக்கிய பங்களிப்பாளர்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் ராஸ் அல் கைமாவில், நாங்கள் அதை சிறப்பாக செய்து வருகிறோம். பல இந்திய முதலீட்டாளர்களுக்கு உதவக்கூடிய பொருளாதார மண்டலங்கள் எங்களிடம் உள்ளன. உற்பத்தி மற்றும் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள். இதேபோல், இந்தியாவில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் டெக்னாலஜி போன்ற மருந்துகள் போன்ற செங்குத்துகளை பூர்த்தி செய்யும் சிறப்பு பொருளாதார மண்டலங்கள் உள்ளன.

"எனவே, இந்தியாவிலும் ராஸ் அல் கைமாவின் பொருளாதார மண்டலத்திலும் (RAKEZ) உள்ள பல்வேறு நிறுவனங்களுக்கிடையில் நெட்வொர்க்கிங் நிகழ்வுகள், ஒத்துழைப்பு நிகழ்வுகள் மற்றும் மேட்ச்மேக்கிங் வாய்ப்புகளை தொடங்குவதற்கு பொருளாதார மண்டலங்களுடன் சகோதர ஒப்பந்தங்கள் இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்" என ஜல்லாட் ஏ.என்.ஐக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

RAKEZ - 2017 இல் நிறுவப்பட்டது, தற்போது நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பன்னாட்டு நிறுவனங்களைக் கொண்டுள்ளது. இது ஐம்பதுக்கும் மேற்பட்ட தொழில்களை உள்ளடக்கியது. அத்தோடு இது பிராந்தியத்தின் மிகப்பெரிய பொருளாதார மண்டலங்களில் ஒன்றாகும்.

RAKEZ தனித்துவமாக இலவச மண்டலம் மற்றும் இலவச மண்டலம் அல்லாத நிறுவன அமைப்புகளையும் வழங்குகிறது. அதன் வாடிக்கையாளர்களுக்கு மத்திய கிழக்கு, வட ஆபிரிக்கா, ஐரோப்பா மற்றும் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவில் வேகமாக வளர்ந்து வரும் சந்தைகளுக்கு எமிரேட்டில் உள்ள முக்கிய தளவாட மையங்கள் மூலம் எளிதாக அணுகலை வழங்குகிறது.

இதில் ஐந்து துறைமுகங்கள், ஒரு சர்வதேச விமான நிலையம் மற்றும் பல வழித்தட அதிவேக நெடுஞ்சாலைகள் ஆகியவை அடங்கும்.

(மூலம்:ஏ.என்.ஐ.)

rakez
RAS AL KHAIMAH
ECONOMIC ZONE

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘காலைக்கதிர்’ வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## இந்தியா - செய்தது என்ன?



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 187**

இந்தியாவில் பேச்சுவார்த்தைகளை நடத்த அனுமதி கோரியயதும் அவர்களால் முதலில் பார்க்கப்பட்டது அதன் பாதுகாப்புக்கு வரக் கூடிய விளைவுகள்தான்.பேச்சுவார்த்தைகள் என்ற பெயரில் விடுதலைப் புலிகள், அவர்களது ஆதரவாளர்கள் பழையபடி தமிழ்நாட்டுக்குள் வருவதை இந்தியா விரும்பவில்லை. சோனியா காந்தியின் பிரத்தியேக மன உளைச்சல்களையும், அவரது குடும்பத்தினரது கவலைகளையும் முக்கியமாகக் கவனிக்க வேண்டியிருந்தது. முதலாவதாக அவரது அபிப்பிராயத்துக்கு அவர்களை அனுகினார்கள். சோனியா காந்தியும் அவரது குடும்பமும் அதற்கு விரும்ப மாட்டார்கள் என எதிர்பார்த்தவர்களுக்கு சோனியா பூரண சம்மதம் தந்தமை ஆச்சரியமாக இருந்தது.

‘எனது மன வேதனைகளையும் இழப்புக்க



ளையும் தாங்கிக் கொண்டு பிள்ளைகளை வளர்த்தெடுத்து வருகிறேன். ஆனால், அதற்காக ஒரு சமாதானத் தீர்வு வருவதற்குக் குறுக்கே நிற்கவில்லை’ என்பது அவரது கருத்தாக இருந்தது.

அடுத்து தமிழ்நாட்டு அரசியலைக் கணக்கெடுக்க வேண்டி இருந்தது. அதற்கான நோட்டங்களுக்கு புதுடில்லி தங்களது மத்திய அமைச்சர் ஒருவரை அனுப்பி ஜெயலலிதா, கருணாநிதி போன்றவர்களுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தினாலும், அவர்களிடையே இருந்த மாநில அரசியல் போட்டிகளினால் தமிழ்நாட்டு அரசின் சம்மதத்தை பெற்றுக் கொள்ள முடியவில்லை. பலமற்ற மாநில அரசுகள் பாதுகாப்பை காரணங்கள் காட்டி விலகிக் கொண்டமையால் இவற்றை பாவித்து இந்தியாவும் அதனை தவிர்த்துக் கொண்டது.

நோர்வே எதிர்பார்த்தது போல் பேச்சுவார்த்தைகளில் முன்னெடுப்புகளுக்கும் அதன் நடைமுறையாக்கங்களுக்கும் வெளிப்படையான ஆதரவுகளை தர இந்தியப் பிராந்திய வல்லமை விரும்பவில்லை. ‘ஆகட்டும், பார்க்கலாம்’ என்று மனோபாவம். நடப்பது என்ன என்பது தங்களுக்குத் தெரிய வேண்டும், அதிலிருந்து அந்தந்தக் கட்டங்களுக்கு அமையவே அனுசரணை தரலாம் என்றும் ‘ஓடும் புளியம்பழமும் போன்ற’ அனுகுமுறையே இருந்தது.

இந்த நிலைகளில் தான் ஏற்படும் இணக்கங்களை அமுலாக்கம் செய்ய வைக்க வேண்டிய தத்துவமுள்ள நாட்டையோ, கட்டமைப்பையோ நோர்வே தேடியது.

இந்து மகா சமுத்திரத்தில் இந்தியாவின் வல்லாதிக்கத்தை மீறி எந்த ஒரு மேற்கத்திய நாடும் அதற்கு முன் வரப்போவதில்லை என்ற புரிந்துணர்வு நோர்வேக்கு இருந்தது. இவற்றால், முக்கியமாக ஸ்ரீலங்காவை நிதி உதவிகளினால் கட்டுப்படுத்தி, ஸ்ரீலங்கா அரசு தான் ஏற்றுக் கொள்ளும் இணக்கங்களை மதித்து நடைமுறைப்படுத்த உந்துதல் தரும் என கணக்கெடுத்த நோர்வே இதற்கான நிதிகளை தரக்கூடிய நாடுகளை அனுகியது.

ஜப்பான் அந்தக் காலகட்டத்தில் தாங்கள் சர்வதேசப் பரப்பில் அங்கீகாரங்கள் பெற்றுக் கொள்ள விரும்பியதாலும், ஸ்ரீலங்காவோடு மதரீதியாகவும் வர்த்தக துறைகளிலும் பெரும் அளவில் ஈடுபட்டிருப்பதாலும், நிதி திரட்டுவதை முன்னின்று செயல்படுத்தி வந்தது. இதற்கான முன் கூடல் நிகழ்ச்சிகளில் இந்தியா முக்கிய பங்குகள் எடுக்காது, சாதாரண வெளியுறவு அதிகாரியையே பார்வையாளராக அனுப்பி வைத்தது. இதனால் நிதிக் கட்டமைப்புக்கும் இணக்கங்களின் அமுலாக்கத்திற்கும் இணைத் தலைவர்களாக ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதியும், அமெரிக்காவும் அழைக்கப்பட்டனர்.

யார் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அமெரிக்கா தான் இன்றுவரை உலக வல்லரசுகளில் முதன்மை நாடாக விளங்குகிறது. அந்த முதன்மை நிலையை நிலை நிறுத்திக் கொள்ள தேவை கருதி உலகின் எப்பாகத்திலும்ராணுவத்தையும் அமெரிக்கா பாவிக்கும்.

இந்திய – பசுபிக் பிராந்தியத்தில் சீனாவை முன்னேற விடாது தடுக்க வேண்டும் என்பதில் குறியாக இருந்த அமெரிக்கா, இந்தியாவைப் பிராந்தியத்தில் பகைத்துக் கொள்ளாது, சமாதானத்தை ஏற்படுத்தி, தனது ஆளுமைக்குள் அந்தப் பகுதியை வைத்திருக்க விரும்பியது. இராணுவம் தேவைப்படின் அமெரிக்கா இந்தியாவுடன் இணைந்து பிராந்தியத்தின் செயலாக்கத்தில் இறங்கி இருக்கும். ஆகவே இந்தியா இணக்கத் தலைமைகளிலோ அந்தக் கட்டமைப்புகளிலோ ஈடுபாடுகள் காட்டவில்லை. நடந்த, நிதி தரப் பொருந்திய நாடுகளின் கூட்டத்தில் இந்தியாவின் மூத்த அதிகாரி கலந்து நிலைமைகளை அவதானித்தார்.

பின்னர் நடந்த பேச்சுவார்த்தைகளில் விடுதலை புலிகள் தங்களது இடைக்காலக் கட்டமைப்பை முன்வைத்த பொழுது இந்தியா வெளிப்படையாக இல்லாவிட்டாலும், பின்னணிகளில் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்று அமெரிக்க முகத்தை எதிர்க்கவோ மறுதலிக்கவோ இல்லை. இந்தக் காலகட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா பிரதமர் ரணில் அரசில் இருந்த நான்கு அமைச்சர்களை நீக்கி, பின் அவரது அரசாங்கத்தையும் பதவி இழக்கச் செய்தார்.

இந்தியாவில் இந்தக் கோட்பாடுகளையும் போக்கையும், அது தொடக்கத்தில் இருந்து எடுத்த நிலைப்பாடுகளையும் நோர்வேத் தரப்புகள் மதியுரைஞர் பாலசிங்கத்திற்கும், பிரபாகரனுக்கும் மற்றைய படைத் தளபதகளுக்கும்



அறிவித்துக் கலந்துரையாடாமல் விடவில்லை.

ஆனாலும் இந்தியாவைப் பற்றிய நோக்கங்களிலும் அனுகுமுறைகளிலும் விடுதலைப் புலிகளும் மாறுதல்களை ஏற்படுத்திக் கொள்ள விரும்பவில்லை.

முரண்பாடுகளை வெளிப்படையாகவே தொடர்ந்து, இந்தியா விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை தமிழ் மக்களுக்கு எதிரானவை அல்ல எனப் பிரித்துக் காட்டி, தமிழ் மக்களது உரிமைகளுக்குத் தான் துணை நிற்போம் என்றும், விடுதலைப் புலிகள் அழிக்கப்படுவது அவர்கள் பயங்கரவாதத்தை கைவிட மறுப்பதனால்தான், உலகம் இந்தப் பிராந்தியத்தில் தொடர்ந்தும் பயங்கரவாதத்தை அனுமதிக்கப் போவதில்லை என்ற செய்திகளையே தந்து கொண்டிருந்தது.

சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஜனாதிபதி மஹிந்தா முறித்து, போரைத் தொடங்கிய ஒவ்வொரு கட்டத்திலும் நோர்வே சமாதான பேச்சாளர்கள் இந்தியாவை அனுகி, போரை நிறுத்துமாறு அழுத்தங்களை ஸ்ரீலங்கா மேல் தந்து, பேச்சு வார்த்தைக்கு திரும்புமாறு புத்தி சொல்ல கோரினராம். இவை எல்லாவற்றையுமே இந்தியா கணக்கில் கொள்ளாது விடுதலைப் புலிகள் அழிவுறுவதை அது தடுக்கவில்லை. பிராந்தியத்தின் ஒரு வல்லமையுள்ள சக்தியாக பிரபாகரன் இருக்கும் வரை விடுதலைப் புலிகளின் மீது ஆளுமை செலுத்துவது கடினம் என்றும், தொடர்ந்து வளரும் அவர்களது போராட்டம் தமிழ்நாட்டிலும் பிரிவினைக் கோரிக்கையை வலுவடையச்செய்யும் என்றும் இந்தியா கணித்திருந்தது. அதேசமயம் சீனப் பெருங்கடலில் சீனாவால் காட்டப்படும் ஆர்வத்தினால் சீனா ஸ்ரீலங்காவைக் கைவிடப் போவதில்லை என்பவை தெளிவாகத் தெரிந்த படியால்தான் அவற்றைக் கட்டுப்படுத்த இந்தியா நகவுகளை மேற்கொண்டது. இந்திய சமுத்திர பிராந்தியத்தை மையப்படுத்தி நடைபெறும் இந்தப் புவிசார் அரசியலுக்கு மிக அருகாமையில் தமிழ்த் தேசமும் அமைந்துள்ளது. ஆகவே அங்கு தங்களுக்கு அனுசரணையான அரசியல் அன்றி, பாதகமாகனவை நடக்க இந்தியா பொறுத்து இருக்க போவதில்லை. இந்திய முரண்பாடுகளினால் விடுதலை புலிகள் முற்றும் முழுதாக சீனாவிடம் சரணடைய கூடும் என்ற எண்ணங்களும் இந்தியப் பாதுகாப்புப் பகுதிகளிலே இருந்ததும் அதன் முடிவுகளுக்கு காரணமாய் அமைந்தது.



ஆகவே விடுதலைப்புலிகளின் லட்சியங்களையோ, அரசியலையோ முன்னெடுத்துக் கொண்டிருக்கும் தரப்புகளோ அன்றில் தங்களது அரசியலுக்கும் விடுதலை புலிகளின் அரசியலுக்கும் தொடர்புள்ளது எனக் கூறி அரசியல் செய்வோர் யாராகிலும் இந்து சமுத்திர பிராந்தியத்தில் நடக்கும் அரசியலையும், அதற்காக தற்போது உள்ள புவிசார் அரசியல் நிலைக்கு இந்தியாவின் வல்லமை தவிர்க்க முடியாதது என்பதையும் புரிந்து, தெளிந்து, யதார்த்தமான வழிகளை வகுக்க வேண்டும்.

தமிழ் மக்களுடன் செய்த இணக்க ஒப்பந்தங்களுக்கு எல்லாம் சமாதி கட்டிய ஸ்ரீலங்காவின் நம்பகத் தன்மையை அறிந்திருந்த நோர்வே பேச்சாளர்கள் ஸ்ரீலங்காவை இணக்கங்களை நடைமுறைப்படுத்த வைக்க பிராந்தியத்தின் வல்லமை சக்தி தேவை என்று கருதினர். ஆனால் இன்று ‘பேசுவோம், பேசுவோம்’ என்று புறப்படுவோர், அதை ஒட்டிய விடயங்கள், உறுதிமொழிகள் அமுல் நடத்தப்படுவதற்கு யாருடைய உத்தரவாதங்களை நம்பி இருக்கிறார்கள்? தந்தை செல்வா மண்டாரநாயக்காவையும், பின் டட்லியையும், அதன் பின் ஒவ்வொருவராக நம்பி ஏமாந்தமை போல், இப்பொழுது ரணிலா?

சமஷ்டி என்பது கோவில் அர்ச்சனைகளில் உச்சரிக்கப்படும் மந்திரமாகக் காலம் காலமாக நடந்து வந்தது. இந்தப் பூஜையிலும் உச்சாடனத்திற்கு அதுவே கொண்டு வரப்படுகிறது. ஆனால் ரணிலோ நாட்டு மக்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் தீர்வை சகலரும் சமமாக வாழ்ந்து செழிக்க அடுத்த சுதந்திர தினத்திற்கு முன் தருவேன் என்று மட்டுமே சொல்லுகிறார். அவருக்கு தமிழ் பரப்புகள்தான் சமஷ்டி பற்றி அவர் பேசியவற்றை அவருக்கு நினைவூட்டுகின்றன. ஆனால் அடுத்த அரசியல் திட்டம் தானமைத்த கட்டமைப்பின் கிளையை வவுனியாவில் அங்குரார்ப்பணம் செய்வதிலும், வவுனியாவில் சர்வதேச விமான நிலையம் அமைக்கக் கூடிய சாத்திய கூறுகளை ஆராய்கிறோம் என்று பேசுவதில் தான் இருக்கிறது. அதனை உணர்ந்து கொள்ள வேண்டும்.

(வளரும்.....)

# நுட்பியல் அவத்தை

## புதிய தொழில்நுட்பமும் வங்கிச்சேவையும்

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் - தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நுட்பியல் அவத்தையில் தரவுத்தளங்கள் புதையுண்டு, அணுகமுடியாத ஒன்றாகக் காணப்பட்ட காலம் மலையேறி இன்று அது முடிவில்லாத நுகர்வுக்குரியதாக மாற்றமடைந்துள்ளது. இன்று தரவுத்தள தொழில்நுட்பம் அதன் ஆற்றலிலிருந்தும் அர்த்தமுள்ள தரவை வெளியேற்றுகிறது. அதற்குக்காரணம் செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் மெசின் லேர்னிங் (ML) போன்ற புதிய யுகத் தொழில்நுட்பங்கள் இன்று வங்கிச் செயல்பாடுகளை அடியோடு மாற்றியுள்ளன. AI தொழில்நுட்பம் காரணமாக தரவுத் தொகுப்புகளிலிருந்து நிகழ்நேர தரவு பகுப்பாய்வு நடத்துவது மற்றும் வங்கி வாடிக்கையாளர்களுக்கு தனிப்பயனாக்கப்பட்ட தீர்வுகளை வழங்குவது சாத்தியமாகிறது.

சக்திவாய்ந்த AI கருவிகள் மூலம், மையத்தில் இருக்கும் முன்கணிப்பு பகுப்பாய்வைப் பயன்படுத்தி வங்கிகள் தகவலறிந்த முடிவுகளை விரைவாக எடுக்க முடியும். சாத்தியமான வாடிக்கையாளர் ஒன்லைனில் ஏதாவது தேடினால், AI கருவிகள் அதை எடுத்து, விரைவான விற்பனைக்கு வழிவகுக்கும் தொடர்புடைய உள்ளடக்கத்தை வழங்குகின்றன. மனிதர்களின் தலையீடு இல்லாமல் வாடிக்கையாளருக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட தீர்வுகள் வழங்கப்படுவதால் இது வாடிக்கையாளர் சேவையை பெரிதும் மேம்படுத்துகிறது.

இந்த நுட்பியல் அவத்தை வசதி காரணமாக வாடிக்கையாளரின் செலவு முறைகளை ஆய்வு செய்யவும், பல்வேறு வாடிக்கையாளர் தரவு புள்ளிகளை ஆய்வு செய்யவும், கடன் வாங்குபவர்களின் கடன் தகுதியை தீர்மானிக்கவும் முடியும் என்பதால் வங்கிகளின் கடன் வழங்கும் செயல்முறைகளும் கணிசமாக மேம்பட்டுள்ளன. இதனால் ஏராளமான ஆவணங்களும் குறைக்கப்பட்டுள்ளன.

உரை மற்றும் பேச்சைப் படிக்க, செயலாக்க மற்றும்புரிந்துகொள்ள இயற்கைமொழிசெயலாக்கத்தை (NLP) பயன்படுத்தும் தொழில்நுட்பத்தினால் அரட்டை முகவர்களின் அறிமுகத்துடன் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட வங்கி இன்றியமையாததாகி விட்டது. வாடிக்கையாளரின் கேள்விகளுக்கு பதிலளிக்க வங்கிகள் இந்தத் தொழில்நுட்பத்தை வெற்றிகரமாக பயன்படுத்தியுள்ளன, இது மனித மூலதனத்தின் நேரத்தையும் முயற்சியையும் குறைக்க உதவியது மற்றும் விரைவான மற்றும் நிலையான சேவையை வழங்க உதவியது. இந்தத் தொழிநுட்பம் ஊடாக வங்கிகள் செயல்பாட்டுச் செலவில் பல மில்லியன் சேமிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத்தொழில்நுட்பவசதியால்வாடிக்கையாளர்கள் வங்கிகளின் எதிர்பார்ப்புகள் மாற்றத்தை செயல்படுத்தி, தொலைதூர இடத்திலிருந்து தங்களுடைய வங்கித் தேவைகளைப் பூர்த்தி செய்ய அனுமதிக்கிறது. சரியாக, வங்கிகள் விரைவாக டிஜிற்றல்மயமாக்கல் அலைவரிசையில் குதித்து, மாற்றத்துக்கு உட்படுகின்றன. அதே வேளை, வங்கிகள் தேவைகளுக்கு ஏற்ப தங்கள் சேவைகளைப் புதுப்பித்தன.




கிளைகள், ஏடி.எம்கள் மற்றும் ஒன்லைன் வங்கி போன்ற பல்வேறு நிறுவனங்களுக்கு இடையே உள்ள தடைகளை உடைத்து, தங்கள் வாடிக்கையாளர்களுக்கு தடையற்ற ஓட்டத்தை உருவாக்குகின்றன.

மாறிவரும் வாடிக்கையாளர் வங்கிச் சேவையானது, டிஜிற்றல் உலகங்களை நெருக்கமாகக் கொண்டுவருவதை நோக்கிச் செல்கிறது, மேலும் இது நிதி மற்றும் வங்கித் துறையை சாதகமாக பாதிக்கிறது. வங்கிகள் தங்கள் வாடிக்கையாளர்களை நீண்ட காலத்திற்கு தக்கவைக்க டிஜிற்றல் மயமாக்கலின் இந்த தேவையை கவனத்தில் கொள்கின்றன.

COVID-19 இன் தொற்றுநோய், வங்கித் துறையானது உயிருடன் இருக்க டிஜிற்றல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த அமைப்புகளை பெரிதும் சார்ந்திருக்க உதவியது. எவ்வாறாயினும், தொற்றுநோய்க்குப் பிறகு, பெரிய டிஜிற்றல் மாற்றம் மற்றும் வங்கிகளுக்கு புதிய வணிக மாதிரிகள் வடிவில் புதிய தொடக்கங்கள் ஏற்பட்டன. மூன்றாம் தரப்பு நிதி நிறுவனங்களுக்கு நுகர்வோர் வங்கி, நிதி மற்றும் பிற வாடிக்கையாளர் தரவுகளுக்கு திறந்த அணுகலை அனுமதிக்கும் வகையில், திறந்த வங்கியும் சமீபத்தில் பெரும் வளர்ச்சி பெற்றுள்ளன. முடிவாக,





எடுத்துக்காட்டாக, மொபைல் வங்கிச் சேவையில் நிதியை மாற்றுவது, ஒன்லைனில் அவர்களின் பரிவர்த்தனைகளைச்சரிபார்ப்பது, அவர்களின் கணக்கு அறிக்கைகளைப் பதிவிறக்குவது அல்லது கடனுக்கு விண்ணப்பிப்பது போன்ற அனைத்தையும் இன்று மொபைல் போனில் விரல் களால் கிளிக் செய்வதன் மூலம் செய்ய முடியும். இதனால் வங்கிகள் மெலிந்த முறையில் செயல்படவும் தேவையற்ற செலவுகளைக் குறைக்கவும் உதவுகின்றன.

இன்று உலகம் முழுவதும் கிரெடிட் கார்டுகள், டெபிட் கார்டுகள், மொபைல் பேங்கிங் ஆப்ஸ், மொபைல் வாலட்கள், மூன்றாம் தரப்பு பேமெண்ட் ஆப்ஸ் போன்றவற்றின் பயன்பாடு கணிசமாக உயர்ந்துள்ளது. இது வாடிக்கையாளர்விருப்பங்களின்மனநிலையில் இன்றியமையாத மாற்றத்தைக் குறிக்கிறது. வங்கிகள் தங்கள் செயல்முறைகளை நெறிப்படுத்தி,

தொழில்நுட்பத்தின் சாதகமான தாக்கத்தை வங்கி நிறுவனங்கள் முழுவதும் தெளிவாக உணர முடியும். வங்கித்துறை பெரும் முன்னேற்றம் கண்டிருந்தாலும், வங்கிகள் இன்றும் பல சவால்களை எதிர் நோக்குகின்றன. இன்னும் பல பயன்படுத்தப்படாத வாய்ப்புகள் உள்ளன. சுவால்கள் உள்ளன. வங்கிகள் தங்கள் வாடிக்கையாளர்களின் தரவின் புனிதத்தன்மையைப் பேணுவதும், அவர்களின் பாதுகாப்பைத் துறக்காமல் அவர்களுக்கு சிறந்த தீர்வுகளை வழங்குவதும் கடினமான பணியாகவுள்ளது. தரவு மீறல்கள் அல்லது கசிவுகள் வங்கிகளுக்கான சவாலாகவுள்ளன. தங்கள் வாடிக்கையாளர்களிடையே மின் – வங்கி பற்றிய அறிவு இல்லாமை ஒரு சவாலாக நோக்கப்படுகின்றது. இங்கு பயிற்சி மற்றும் புதுப்பித்தல் தேவைப்படும் எப்போதும் வளர்ந்து வரும் தொழில்நுட்ப நிலப்பரப்பு ஆகியவை வங்கித் துறை இன்னும் கண்டுபிடிக்க வேண்டிய சில சவால்கள். உள்ளன.

# சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் மண்டைதீவில் நெய்தல் சூழலியல் பூங்கா!













யாழ்ப்பாணம், நவ. 21

வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட மண்டைதீவுப் பகுதியில் அமையப்பெறவுள்ள நெய்தல் சூழலியல் பூங்கா வளாகத்தில் மரம் நடுகை நிகழ்வு நேற்று காலை 9 மணியளவில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், மேலதிக அரசாங்க அதிபர் ம. பிரதீபன், வேலணைப் பிரதேச சபைத் தவிசாளர், பிரதேச செயலர், பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச சபை அலுவலகர்கள் மற்றும் இயற்கை ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கலந்து கொண்ட யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் அவர்கள் இந்த நெய்தல் சூழலியல் பூங்காவிற்குரிய அனைத்து விதமான அனுமதிகளையும் இடையூறுகள் இன்றி பெற்றுக் கொள்ள ஆவன செய்வார் எனக் குறிப்பிட்டு இத் திட்டம் சிறப்புற இடம்பெற வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் அரசாங்கத்தினால் ஏழரைக் கோடி ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம், தற்போது நெய்தல் சூழலியல் பூங்கா நிர்வாகி வசம் கிடைக்கப் பெற்றுள்ளது.

சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் இந்த சூழலியல் பூங்கா நான்கு கட்டங்களாக நிர்மாண நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளன.

படகோட்டம், சிறுவர் பூங்கா போன்ற பல பொழுது போக்கு அம்சங்களுடன் தீவக சுற்றுலா, கண்டல்தாவர பார்வையிடுகை மற்றும் பறவைகள் ஆராய்ச்சி என பல அம்சங்களை உள்ளடக்கியதாக இந்த இடம் அமையவுள்ளது.

அந்தவகையில் இந்த ஆண்டு இறுதியில் முதற்கட்டமாக மக்கள் பாவனைக்கு இது திறந்து வைக்கப்படவுள்ளது.

## மாவீரர்களின் பட்டியலில் ...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வேளை மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினரான அரியநேத்திரன் கருணாவின் பிளவின்போது அந்தத் தரப்பிலிருந்து வெளியேற முடியாத நிலையிலிருந்த போராளிகள் பின்னர் நடைபெற்ற மோதலில் கொல்லப்பட்டனர் இவர்களையும் மாவீரர் பட்டியலில் இணைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இந்த 22 பேரிலும் தானே இயக்கத்தின் அதி விசுவாசியென காட்ட முந்திரிக் கொட்டைத்தனமாகச் செயற்பட்டார் கஜேந்திரன். இயக்கத்தைப் பொறுத்தவரை யார் யாரை மாவீரர் பட்டியலில் இணைப்பது ,இணைக்கக்கூடாது என்று நீங்கள் சொல்லக்கூடாது என்றார்.

இத்தனை வருட போராட்ட வாழ்வில் எத்தனை அதி விசுவாச நடிகர்களை அரசியலில் சந்தித்திருப்பார் தலைவர். அவர் உடனே 'இவர்(அரியநேத்திரன்) அந்த மக்களின் பிரதிநிதி. தன்னுடைய மக்களின் உணர்வைப் பிரதிபலிக்கிறார் இவர். இம்மோதலில் உயிரிழந்தவர்கள் ஏற்கெனவே எம்முடன் இருந்து விசுவாசமாகச் செயற்பட்டவர்கள்தானே!' என்று சொல்லி கஜேந்திரன் தன்னுடைய அளவை தான் புரிந்துகொள்ள வேண்டும். என்று மறைமுகமாக உணர்த்தினார். அப்படியிருந்தும் காணிக்கு பின்னுரித்து போட்டு எழுதுவதுபோல மாவீரர் தொடர்பான விடயங்களை முடிவெடுக்கும் ஏகபோக அதிகாரத்தைத் தலைவர் தந்துவிட்டுப் போயிருப்பதாக உணர்த்த முனைகின்றனர். தரவை உள்ளிட்ட மாவீரர் துயிலும் இல்ல நினைவேந்தல் குழுக்களை அலட்சியப்படுத்தி தன்னிச்சையாக முடிவெடுக்கின்றனர்.

எந்த இலட்சியத்திற்காக இந்த மண்ணில்மாவீரர்களானார்களோ அவர்களது ஆன்மாவைக் கொச்சைப்படுத்தும் முயற்சிகளை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் கைவிட வேண்டும். முதலில் வேறு எந்த இயக்கத்தில் இருந்து உயிரிழந்தவர்களின் பெற்றோரைக் கூட்டிக் கொண்டு வந்து முதன்மைச் சுடரேற்ற வைத்தாலும் வைப்பார்கள். இவர்களின் மறுபக்கத்தை தாயகத்தில் உள்ளோர் மட்டுமல்லாது புலம்பெயர்ந்து வாழும் உறவுகளும் புரிந்து கொள்ள வேண்டும். எந்தக் காலத்திலும் தங்கள் பெயர் மாவீரர் பட்டியலில் இடம்பெறாது எனத் தெரிந்து கொண்டும் தம்முயிரை ஆகுதியாக்கிய மாவீரர்களுமிருக்கிறார்கள். அவர்கள் வாழ்ந்த மண்ணில் அரசியல் இலாபத்துக்காக இக்கட்சியினர் செய்யும் கோளாறுகளை நிறுத்த ஒவ்வொருவரும் தங்களாலான முயற்சிகளைச் செய்யவேண்டும். - என்றுள்ளது.

விளம்பரங்களுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622
kalaikkathiradvt@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# பெண்களின் உரிமைக்காக குரல் கொடுப்பவர்கள் ஏன் என்னையும் ஒரு பெண்ணாக மதிக்கவில்லை?

### டயனா கமகே காட்டத்துடன் கேள்வி



ஐக்கிய மக்கள் சக்தியில் பெண் உரிமைக்காகக் குரல் கொடுப்பவர்கள் என்னை கடுமையாக விமர்சிக்கிறார்கள்.

பெண்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்பவர்கள் என்னை பெண்ணாக ஏன் மதிக்கவில்லை?

நானும் ஒரு பெண்தான். நாடாளுமன்றத்தில் ஒரு பெண்ணாக இருந்து பல சவால்களை எதிர்கொண்டுள்ளேன் என சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே சபையில் ஆதங்கத்துடன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தின்போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நாட்டுக்கு முதலீடு பெற்றுக்கொள்ளும் நோக்கில் கஞ்சா பயிர்செய்கையை சட்டபூர்வமாக்குமாறு குறிப்பிட்டதை தொடர்ந்து பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளேன்.

எமக்கு எதிரான சேறுபூசலை எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கிறார்கள்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பெண் உரிமைக்காக குரல் கொடுப்பவர்கள் என்னைக் கடுமையாக விமர்சிக்கிறார்கள்.

பெண்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்பவர்கள் என்னை பெண்ணாக ஏன் மதிக்கவில்லை?

நானும் ஒரு பெண் தான். நாடாளுமன்றத்தில் ஒரு பெண்ணாக இருந்து பல சவால்களை எதிர்கொண்டுள்ளேன்.

ஐக்கிய மக்கள் சக்தியில் பெண்களுக்காகக் குரல் கொடுப்பவர்கள் அரசியல் நோக்கத்தை முன்னிலைப்படுத்தி செயற்படுகிறார்கள்.

பெண் உரிமைகளை அரசியல் நோக்கத்துக்காகவும், கட்சி வேறுபாட்டுக்காகவும் மாற்றியமைத்துக்கொள்ளக் கூடாது.

அரசியல் நோக்கம் கருதி நான் பெண் உரிமைக்காக குரல் கொடுக்கவில்லை.

பெண் உரிமைக்கான போராட்டம் அரசியல், கட்சிக் கொள்கைக்கு அப்பாற்பட்டதாக காணப்பட வேண்டும். எதிர்க்கட்சியின் தலைவர் எனக்கு எதிராக முன்னெடுக்கும் சேறுபூசலை தவிர்த்துக்கொள்ள வேண்டும். – என்றார்.

## சுற்றுலா வீசா ஊடாக வெளிநாடு செல்வது தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டுள்ளதாம்!

### அப்புஹாமியின் கேள்விக்கு ஜகத் புஸ்பகுமார பதில்

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யாமல் சுற்றுலா வீசா ஊடாக ஓமான் நாட்டுக்கு சென்ற பெண்கள் தொடர்பில் பணியகத்துக்குப் பொறுப்பேற்க முடியாது. இருப்பினும், இலங்கை பிரஜைகள் என்ற அடிப்படையில் வெளிவிவகாரத்துறை அமைச்சு உரிய நடவடிக்கை எடுத்துள்ளது.

சுற்றுலா வீசா ஊடாக வெளிநாடு செல்வது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் இராஜாங்க அமைச்சர் ஜகத் புஸ்பகுமார தெரிவித்தார்.

சபாநாயகர் தலைமையில் நாடாளுமன்றகூட்டத்தொகுடியபோது இலங்கை பணிப்பெண்கள் ஓமான் நாட்டில் பகிரங்க ஏலத்துக்கு விற்பனை செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் எதிர்க்கட்சியின் உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி முன்வைத்த கேள்விக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இதன்போது இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

ஓமான் நாட்டில் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைப் பணிப்பெண்கள் சுற்றுலா வீசா ஊடாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யாமல், முறையான வழிமுறைகளை பின்பற்றாமல் சென்றுள்ளார்கள்.

இவர்கள் சுற்றுலா வீசா ஊடாக இலங்கையில் இருந்து டுபாய் நோக்கிச் சென்று, அங்கிருந்து ஓமான் சென்றுள்ளார்கள். வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் இவர்கள் பதிவு செய்யப்படவில்லை. இந்த விவகாரத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக உரிய விசாரணைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சுற்றுலா வீசா ஊடாக வெளிநாடுகளுக்கு செல்வது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதன்போது மீண்டும் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி, ஓமான் நாட்டில் இலங்கை பணிப்பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் இராஜாங்க அமைச்சரின் பதில் பாரதூரமானது.

வெளிநாட்டு பணியகத்தில் பதிவு செய்யவில்லை என்பது இரண்டாம் பட்சவிவகாரம்.

பகிரங்கமான முறையில் இலங்கைப் பெண்கள் ஏலத்தில் விற்கப்படுகிறார்கள். ஆகவே இவர்களை இலங்கை பிரஜைகளாகக் கருதி உரிய நடவடிக்கையை எடுங்கள் என வலியுறுத்தினார்.

இதற்கு மீண்டும் பதிலளித்த இராஜாங்க அமைச்சர், அரசியல் ரீதியில் பிரபல்யமடையும் வகையில் இங்கு கருத்துரைக்க வேண்டாம். இவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யாமல், இடைத்தரகர் ஊடாக முறையற்ற வகையில் சென்றுள்ளார்கள்.

இந்த விவகாரம் தொடர்பில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் உரிய நடவடிக்கை எடுத்துள்ளது. முறையற்ற வகையில் செல்லும் போது பணியகத்தால் பொறுப்பேற்க முடியாது. இருப்பினும், இவர்கள் இலங்கையர்கள் என்ற அடிப்படையில் வெளிவிவகாரத்துறை அமைச்சு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. – என்றார்.

## சில கட்டணங்கள் 2023 இல் எகிறும்!

எதிர்வரும் வருடம் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் மின்சாரம், எரிபொருள், ரயில் மற்றும் பஸ் கட்டணங்கள் 15 சதவீதம் அதிகரிக்கும் என்று நிதி அமைச்சின் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கமைய கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எப்படியிருப்பினும் அதற்கு முன்னர் வரி மீளாய்வு நடத்தி வற் இல் இருந்து விலக்கு பெறக்கூடிய பொருள்கள் மற்றும் சேவைகள் தொடர்பில் தனித்தனியான தீர்மானம் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது..

அதே நேரத்தில், புதிய வற் சட்டமும் அறிமுகப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது பெற்றோல் மற்றும் டீசல் வற் வரி விதிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் 2023ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி முதல் இறக்குமதி செய்யப்படும் மசகு எண்ணெய் மீது வற் வரி அமுல்படுத்தப்படும் என தெரியவந்துள்ளது.

இது தவிர, தற்போது வற்றுக்கு உட்பட்ட டீசல் மற்றும் பெற்றோல் மீது 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் கூடுதல் வரி விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதன் சதவீதம் இன்னும் அறிவிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், புதிய வரிகள் விதிக்கப்பட்டுள்ளதால், எரிபொருள் விலை ஏப்ரல் முதலாம் திகதி முதல் அதிகரிக்கப்படவுள்ளது.

தற்போது வற் வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ள போக்குவரத்து துறையில் ரயில் மற்றும் பஸ் கட்டணங்களுக்கும் ஏப்ரல் முதலாம் திகதி முதல் வற் வரி பொருந்தும். எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக ரயில் மற்றும் பஸ் கட்டணங்களும் அதிகரிக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதவிர அனைத்து அரசாங்க சேவை கட்டணங்களும் 20 சதவீதம் உயர்த்தப்பட உள்ளது. நெடுஞ்சாலை கட்டணம், திருமண பதிவு கட்டணம், நிறுவன பதிவு கட்டணம் உள்ளிட்ட பல வகையான கட்டணங்களும் அதற்கேற்ப அதிகரிக்கும்.

இதுவரை எரிபொருள், மின்சாரம், போக்குவரத்துத் துறைகளில் இருந்த வற் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக, ஆண்டுக்கு 1 சதவீதம் வருமானம் இழக்கப்படுவதாக வரவு – செலவு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தனுஷ்க குணதிலக்கவின் செலவுகளை ஏற்க முன்வந்த ஆஸ்திரேலியவாழ் இலங்கையர்கள்



இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்கவுக்கு ஒதுக்கப்பட்ட 150,000 ஆஸ்திரேலிய டொலர் பிணைத்தொகை ஆஸ்திரேலியாவில் வசிக்கும் இலங்கைப் பெண்ணொருவரால் வழங்கப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், அந்தப் பெண்ணுக்கும் தனுஷ்க குணதிலக்கவுக்கும் இடையிலான தொடர்பு இதுவரையில் வெளியாகவில்லை எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய, ஆஸ்திரேலியாவில் உள்ள இலங்கையர்கள் தனுஷ்க குணதிலக்கவுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளனர்.


தனுஷ்க குணதிலக்கவுக்கு பிணை பெறும்போது ஆஸ்திரேலிய பொலிஸாருக்கு நிரந்தர முகவரியை வழங்க வேண்டியிருப்பதால், குணதிலக்கவுக்கு அந்த நாட்டில் உள்ள செல்வந்தர் ஒருவரின் வீட்டின் முகவரி வழங்கப்பட்டுள்ளதாகவும், அவர் அந்த வீட்டில் வசிப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவரின் வழக்கு முடியும் வரை அவரது செலவுகளை ஆஸ்திரேலியாவில் வசிக்கும் இலங்கையர்கள் ஏற்க முன்வந்துள்ளனர்.

தனுஷ்க குணதிலக்கவுக்கு எதிரான வழக்கு ஜனவரி 12ஆம் திகதி மீண்டும் அழைக்கப்படவுள்ளது.

## அடுத்த ஆண்டு தொடக்கம் உரத்துக்கு பதிலாக பணம்!

### வழங்க தீர்மானம் என்கிறார் அமைச்சர் மஹிந்த அமரவீர



உரத்துக்குப் பதிலாக, அதனைக் கொள்வனவு செய்வதற்கான பணத்தை விவசாயிகளுக்கு வழங்குவதற்கான செயற்திட்டத்தை அடுத்த வருடம் முதல் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக விவசாயத் துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர்கள், உரம் தொடர்பில் செயற்படும் மேலதிக பணிப்பாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்தக் கலந்துரையாடலின் போது, விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் உரத்தை வழங்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. குறிப்பாக யூரியா தேவையானளவு முழுமையாகக் கிடைக்கப் பெற்றுள்ளது. கிடைக்கப் பெற்றுள்ள உரத்தை முறையாக விவசாயிகளுக்கு வழங்குவதற்கான ஆலோசனை வழங்கப்பட்டது. அதேபோன்று உர விநியோகம் தொடர்பில் விவசாயிகளால் அளிக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பிலும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

மேலும் அடுத்த வருடம் முதல் உரத்தை வழங்குவதற்குப் பதிலாக, அதனைக் கொள்வனவு செய்வதற்கான பணத்தை விவசாயிகளுக்கு வழங்குவதற்கான யோசனை தொடர்பிலும் இதன் போது தீர்க்கமாக அவதானம் செலுத்தப்பட்டது. இதன் பலன் நேரடியாக விவசாயிகளைச் சென்றடைய வேண்டும் என்பதே ஜனாதிபதியினுடைய நிலைப்பாடாகும். இது தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டு இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.11.2022இல் வெளியிடப்பெற்றது.